


PRGI No. TNBIL/25/A1569

வைகறையில்
# பேப்பர்பாய்
www.paperboy.biz
VAIGARAIYIL PAPERBOY




சென்னை மலர்: 01 இதழ்: 152 13.01.2026 செவ்வாய்க்கிழமை

Chennai | Volume: 01 | Issue: 152 | Tuesday | pages 8 | Rs.5/-

DISTRIBUTED ACROSS TAMILNADU AND PUDUCHERRY

## இன்றைய நாள்

செவ்வாய்க்கிழமை
(13-01-2026)
விசுவாவசு ஆண்டு, மார்கழி -29
பிறை: தேய்பிறை
திதி
தசமி மாலை 05.36 வரை
பிறகு ஏகாதசி
நட்சத்திரம்:
விசாகம் பின்னிரவு
02.20 வரை பிறகு அனுஷம்
யோகம்
மரண/சித்த யோகம்
ராகுகாலம்
பிற்பகல் 3.00 – 4.30 மணி
எமகண்டம்
காலை 9.00–10.30 மணி
சூலம் – வடக்கு
நல்ல நேரம் :
காலை 8–9 மணி
மாலை 5–6 மணி

மேஷம் ...................... தாமதம்
ரிஷபம் ...................... செலவு
மிதுனம் ...................... சுபம்
கடகம் ...................... வரவு
சிம்மம் ...................... சாந்தம்
கன்னி ...................... நன்மை
துலாம் ...................... மேன்மை
விருச்சிகம் ...................... அமைதி
தனுசு ...................... சுகம்
மகரம் ...................... பாராட்டு
கும்பம் ...................... இன்பம்
மீனம் ...................... கண்ணியம்

# பிஎஸ்எல்வி சி-62 பாதையைவிட்டு விலகியது!

## இஸ்ரோ



**ஸ்ரீஹரிகோட்டா,ஜன.13:**

பிஎஸ்எல்வி சி-62 ராக்கெட் திட்டமிடப்பட்ட பாதையைவிட்டு விலகியதாக இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனத்தின் தலைவர் வி. நாராயணன் அறிவித்துள்ளார்.

பிஎஸ்எல்வி சி-62 ராக்கெட் மூலம் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவன் ஆய்வு மையத்தின் முதலாவது ஏவுதளத்தில் இருந்து நேற்று காலை 10.18 மணியளவில் 16 செயற்கைக்கோள்களை இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனம் (இஸ்ரோ) ஏவியது.

பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனம் (டிஆர்டிஓ) தயாரித்துள்ள பாதுகாப்புத் துறை பயன்பாட்டுக்கான இஓஎஸ்-என் 1 (அன்விஷா) எனும் அதிநவீன செயற்கைக்கோள் உள்பட 16 இந்திய மற்றும் வெளிநாட்டு செயற்கைக்கோள்கள் பிஎஸ்எல்வி சி-62 ராக்கெட்டில் ஏவப்பட்டது.

முதன்மைச் செயற்கைக்கோளான இஓஎஸ்-என் 1, தரையில் இருந்து 505 கி.மீ. தொலைவு கொண்ட சூரிய ஒத்திசைவு சுற்றுப்பாதையில் நிலைநிறுத்தப்பட இருந்தது. அதேபோல், ஸ்பெயின் ஸ்டார்ட் அப் நிறுவனம் உருவாக்கிய கிட் எனப்படும் சிறிய விண்கலமும் அனுப்பப்பட்டது. அதைப் பூமிக்கு மீண்டும் தரையிறக்கும் சோதனையும் மேற்கொள்ளப்பட இருந்தது.

இந்த நிலையில், மூன்றாவது நிலையில் ராக்கெட் திட்டமிடப்பட்ட பாதையைவிட்டு விலகிச் சென்றதாக இஸ்ரோ அறிவித்துள்ளது.

இதுகுறித்து இஸ்ரோ தலைவர் வி. நாராயணன் செய்தியாளர்களுடன் பேசியதாவது:

"இன்று பிஎஸ்எல்வி சி62 / இஓஎஸ் - என்1 திட்டத்தை செயல்படுத்த முயற்சித்துள்ளோம். பிஎஸ்எல்வி ராக்கெட் இரண்டு திட எரிபொருள் நிலைகள் மற்றும் இரண்டு திரவ எரிபொருள் நிலைகளைக் கொண்ட நான்கு நிலை ராக்கெட் ஆகும்.

மூன்றாவது நிலையின் இறுதி வரை ராக்கெட்டின் செயல்பாடு எதிர்பார்த்தபடியே இருந்தது. மூன்றாவது நிலை முடிவடையும் தருணத்தில் ராக்கெட்டில் அதிகப்படியான அதிர்வுகளைக் கண்டோம். இதன் விளைவாக, ராக்கெட்டின் பயணப் பாதையில் ஒரு விலகல் காணப்படுகிறது. நாங்கள் தரவுகளைப் பகுப்பாய்வு செய்து வருகிறோம்" எனத் தெரிவித்துள்ளார்.

# ட்ரம்ப் அத்துமீறி நடந்தால் அமெரிக்க படை, இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்துவோம்: ஈரான்



**துபாய்,ஜன.13:**

ஈரான் மீது அமெரிக்கா தாக்குதல் நடத்தினால், அமெரிக்க படைகள், இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்தப்படும் என ஈரான் சபாநாயகர் முகமது பகர் காலிபஃப் எச்சரித்துள்ளார்.

ஈரான் அணு ஆயுத தயாரிப்பில் ஈடுபட்டதால், அந்நாட்டின் மீது சர்வதேச தடைகள் விதிக்கப்பட்டன. இதன் காரணமாக ஈரானின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்தது. இதனால் ஈரான் மக்கள் ஆட்சியாளர்களுக்கு எதிராக கடந்த மாதம் 28ம் தேதி போராட்டத்தில் குதித்தனர். இவர்கள் மீது ஈரான் பாதுகாப்பு படையினர் தாக்குதல் நடத்தியதில் இது வரை 203 பேர் இறந்துள்ளனர். 2,600 பேர் காயம் அடைந்துள்ளனர். போன் இணைப்புகள் மற்றும் இணையதள இணைப்புகள் துண்டிக்கப்பட்டுள்ளன.

இதற்கு கண்டனம் தெரிவித்த அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப், "ஈரான் சுதந்திரத்தை எதிர்நோக்கியுள்ளது. அங்கு இதுவரை இல்லாத அளவில் போராட்டம் நடைபெறுகிறது. ஈரான் மக்களுக்கு உதவ அமெரிக்கா தயாராக இருக்கிறது" என சமூக ஊடகத்தில் தெரிவித்திருந்தார். இந்நிலையில் ஈரான் மீது தாக்குதல் நடத்த அதிபர் ட்ரம்ப் திட்டமிட்டுள்ளார். ஆனால் அவர் இன்னும் இறுதி முடிவு எடுக்கவில்லை என அமெரிக்க இதழ்களில் செய்தி வெளியானது. அமெரிக்க அரசு விடுத்திருந்த செய்தியில், "அதிபர் ட்ரம்ப்புடன் விளையாட வேண்டாம். அவர் சொன்னால், அதை செய்வார்" என எச்சரிக்கை விடுத்திருந்தது.

இந்நிலையில் ஈரான் நாடாளுமன்ற சபாநாயகர் முகமது பகர் காலிபஃப் விடுத்துள்ள எச்சரிக்கையில், "ஈரான் மீது அமெரிக்கா தாக்குதல் நடத்தினால், அண்டை நாடுகளில் உள்ள அமெரிக்க படைகள் மற்றும் இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்துவோம்" என்றார்.

ஈரான் மதத் தலைவர் அயதுல்லா அலி கமேனி விடுத்துள்ள எச்சரிக்கையில், "மக்கள் போராட்டம் ஒடுக்கப்படும்" என கூறியுள்ளார். ஈரான் அட்டர்னி ஜெனரல் முகமது ஆசாத் விடுத்துள்ள எச்சரிக்கையில், "போராட்டத்தில் பங்கெடுப்பவர்கள் கடவுளுக்கு எதிரியாக கருதப்படுபவர். அவர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்படும். போராட்டத்துக்கு உதவுபவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும்" என கூறியுள்ளார்.

# நமக்குள் எந்தப் பிளவும் ஏற்படுவதற்கு அனுமதிக்கக்கூடாது



**சென்னை,ஜன.13:**

சென்னை நந்தம்பாக்கத்தில் 2-வது நாளாக நடைபெறும் அயலகத் தமிழர் விழாவில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பங்கேற்று பேசியதாவது:-

*வான்புகழ் வள்ளுவர் பிறந்த மண்ணுக்கு சொந்தக்காரர்கள் நாம்...

*வீழ்வது நாமாக இருப்பினும், வாழ்வது தமிழாக இருக்கட்டும்.

*மொழிப்பற்று, இனப்பற்று நமக்கு உண்டு, அது மொழிவெறி, இனவெறியாக மாறாது.

* 4,000 ஆண்டுகள் பழமையான வரலாற்றுக்கு சொந்தக்காரர்கள் நாம் என்பது உறுதியாகி இருக்கிறது.

* நமக்குள் எந்தப் பிளவும் ஏற்படுவதற்கு அனுமதிக்கக்கூடாது.

* நாட்டிலேயே அதிக அளவு அகழாய்வு நடைபெற்ற மாநிலம் தமிழ்நாடு.

*தி.மு.க. அரசு ஒரு கட்சியின் அரசு அல்ல, இனத்தின் அரசு.

* எங்கு வாழ்ந்தாலும் தமிழர்கள் ஒற்றுமையுடன் வாழ வேண்டும் என்றார்.

# எம்ஜிஆர் பிறந்தநாள்: ஜன. 18, 19 ல் பொதுக்கூட்டங்கள்



**சென்னை,ஜன.13:**

அதிமுக நிறுவனத் தலைவர் எம்ஜிஆரின் 109-வது பிறந்த நாளை முன்னிட்டு வரும் 18, 19 ஆகிய தேதிகளில் பொதுக்கூட்டங்கள் நடைபெற இருப்பதாக அக்கட்சியின் பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "அதிமுக நிறுவனத் தலைவர் எம்ஜிஆரின் 109-வது பிறந்த நாள் விழாவை முன்னிட்டு வரும் 18, 19 ஆகிய தேதிகளில் பொதுக்கூட்டங்கள் நடைபெற உள்ளன. கழக அமைப்பு ரீதியாக செயல்பட்டு வரும் 82 மாவட்டங்களிலும்; கழக அமைப்புகள் செயல்பட்டுக் கொண்டிருக்கும் புதுச்சேரி, ஆந்திரா, கேரளா உள்ளிட்ட பிற மாநிலங்களிலும் பொதுக்கூட்டங்கள் நடைபெற உள்ளன. கழக சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள், தாங்கள் சார்ந்த மாவட்டத்தில் நடைபெற உள்ள பொதுக்கூட்டங்களில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்" இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

பொதுக்கூட்டங்கள் நடைபெற உள்ள இடங்கள்; அவற்றில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றுவோர் விபரங்கள் அடங்கிய பட்டியலை அதிமுக வெளியிட்டுள்ளது. அதன்படி, வரும் 18ம் தேதி ஞாயிற்றுக்கிழமை அன்று தென் சென்னையில் நடைபெறும் பொதுக்கூட்டத்தில் எடப்பாடி பழனிசாமி உரையாற்ற உள்ளார். கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டத்தில் கே.பி. முனுசாமியும், திண்டுக்கல் மேற்கு மாவட்டத்தில் திண்டுக்கல் சீனிவாசனும், கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டத்தில் மு. தம்பிதுரையும், கோவை புறநகர் தெற்கு மாவட்டத்தில் எஸ். பி. வேலுமணியும் உரையாற்ற உள்ளனர்.

இதேபோல், வரும் 19ம் தேதி திண்டுக்கல் கிழக்கு மாவட்டத்தில் நத்தம் விஸ்வநாதனும், திருவள்ளூர் கிழக்கு மாவட்டத்தில் சி. பொன்னையனும், நாமக்கல் மாவட்டத்தில் பி. தங்கமணியும், திருப்பூர் மாநகர் மாவட்டத்தில் பொள்ளாச்சி ஜெயராமனும், வட சென்னை கிழக்கு மாவட்டத்தில் டி. ஜெயக்குமாரும், விழுப்புரம் மாவட்டத்தில் சி.வி. சண்முகமும் உரையாற்ற உள்ளனர்.

# பிரதமர் மோடி - ஜெர்மனி அதிபர் மெர்ஸ் இடையே பேச்சுவார்த்தை!



**அகமதாபாத்,ஜன.13:**

இந்தியா வந்திருக்கும் ஜெர்மனி அதிபர் பிரட்ரிக் மெர்ஸ், பிரதமர் மோடியுடன் இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவது தொடர்பாக அகமதாபாத்தில் பேச்சுவார்த்தை நடத்தினார்.

பிரதமர் மோடியின் அழைப்பை ஏற்று ஜெர்மனி அதிபர் பிரட்ரிக் மெர்ஸ், 2 நாள் பயணமாக இன்று இந்தியா வந்துள்ளார். அகமதாபாத்தில் உள்ள சர்தார் வல்லபாய் படேல் சர்வதேச விமான நிலையம் வந்திறங்கிய அவரை அதிகாரிகள் வரவேற்றனர்.

பிரட்ரிக்கின் முதல் இந்திய பயணம் இது. குஜராத்தின் அகமதாபாத்தில் பிரதமர் மோடியும் அதிபர் பிரட்ரிக்கும் இன்று சந்தித்து ஆலோசனை நடத்தினர். அப்போது இரு நாடுகளுக்கு இடையில் வர்த்தகம், முதலீடு, சிக்கலான தொழில்நுட்பப் பரிமாற்றம், பாதுகாப்புத் துறை போன்ற முக்கிய அம்சங்கள் குறித்து தலைவர்கள் இருவரும் விரிவாக ஆலோசனை நடத்தியதாக சொல்லப்படுகிறது.

இந்தக் கூட்டத்தில், வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ். ஜெய்சங்கர், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல் மற்றும் வெளியுறவுச் செயலாளர் விக்ரம் மிஸ்ரி ஆகியோர் உடனிருந்தனர். இந்தக் கூட்டம் காந்திநகரில் உள்ள மகாத்மா மந்திர் வளாகத்தில் நடைபெற்றது.

ஆசிரமத்திற்கு வந்த பிறகு, இருதலைவர்களும் தேசத்தந்தை மகாத்மா காந்திக்கு மலரஞ்சலி செலுத்தினர். மெர்ஸ் அங்குள்ள பார்வையாளர் புத்தகத்திலும் கையெழுத்திட்டார்.

பட்டம் விடும் விழா: மகர சங்கராந்தியை முன்னிட்டு சபரிமதி ஆற்றங்கரையில் மூன்று நாள்கள் நடைபெறும் சர்வதேச பட்டம் விடும் விழா இன்று காலை தொடங்கியது. இந்தவிழாவை பிரதமர் மோடியும், ஜெர்மனி பிரதமர் பிரட்ரிக் மெர்ஸுும் இணைந்து பட்டம்விட்டு தொடங்கி வைத்தனர்.

அக்கொடியில், இரு நாட்டு கொடிகள், தலைவர்களின் படங்கள் மற்றும் இந்து கடவுள்களின் கொடிகள் அச்சிடப்பட்டிருந்தன.

# வெனிசுவேலாவின் செயல் அதிபர் நான்தான்! டிரம்ப் அதிரடி



**அமெரிக்கா,ஜன.13:**

வெனிசுவேலாவின் செயல் அதிபர் டொனால்ட் டிரம்ப்' என்ற எடிட் செய்யப்பட்ட புகைப்படத்தை அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் தனது சமூக வலைதளப் பக்கத்தில் பகிர்ந்துள்ளார்.

வெனிசுவேலாவில் இருந்து அமெரிக்காவுக்கு போதைப் பொருள் கடத்துவதாக குற்றச்சாட்டை முன்வைத்து, அந்நாட்டின் மீது ஜன. 3 ஆம் தேதி படையெடுத்த அமெரிக்கா, அதிபர் நிகோலஸ் மதுரோ மற்றும் அவரது மனைவியைக் கைது செய்து, நாடுகடத்தினர். தற்போது இருவரும் அமெரிக்க சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து, வெனிசுவேலாவில் புதிய அரசுதேர்ந்தெடுக்கப்படும் வரை அமெரிக்கா நிர்வகிக்கும் என்றும், அந்நாட்டின் எண்ணெய் உற்பத்திக்கு அமெரிக்க நிறுவனங்கள் முதலீடு செய்யும் என்றும் டிரம்ப் அறிவித்திருந்தார்.

ஆனால், வெனிசுவேலாவின் உச்ச நீதிமன்ற உத்தரவுபடி, அந்நாட்டின் துணை அதிபராக இருந்த டெல்சி ரோட்ரிகஸ், இடைக்கால அதிபராக பொறுப்பேற்றுக் கொண்டார்.

இதனிடையே, வெனிசுவேலாவுக்கு பல்வேறு நெருக்கடிகளை கொடுக்கும் வகையில் கடந்த சில நாள்களாக அதிபர் டிரம்ப் உத்தரவுகளை வெளியிட்டு வருகிறார்.

இந்த நிலையில், விக்கிபீடியா தளத்தில் 'வெனிசுவேலா செயல் அதிபர் டொனால்ட் டிரம்ப்' என்று அவரது புகைப்படத்துடன் இருக்கும் வகையில் எடிட் செய்யப்பட்ட புகைப்படத்தை ட்ரூத் சோசியல் தளத்தில் டிரம்ப் வெளியிட்டுள்ளார்.

# கூடாரவல்லி திருவிழா



**தஞ்சாவூர்,ஜன.13:** தஞ்சாவூர் மகர்நோம்புச் சாவடி V.P. கோவில் தெருவில் அமைந்துள்ள ஸ்ரீதேவி பூதேவிஸ்ரீ அலமேலு மங்கா ஸமேத ஸ்ரீ ப்ரஸன்ன வேங்கடேஸப் பெருமாள் திருக்கோவிலில் நேற்று (11.01.2026) ஞாயிற்றுக்கிழமை கூடாரவல்லி. ஆண்டாள் மாலை மாற்றும் வைபவம்.

காலை 9 மணிக்கு திருமஞ்சனமும்,10 மணிக்கு மேல் மாலை மாற்றுதல் வைபவத்தில் கலந்துக் கொள்ளும் அனைவருக்கும் திருமணப் பிரார்த்தனை கைக்கூடும் என்பது சான்றோர்களின் கூற்று. இந்த நிகழ்வு சிறப்பாக நடைபெற்றது.

இதில் திரளான பக்தர் கள் மற்றும் பொது மக்கள் கலந்து கொண்டனர். நிகழ்ச்சி ஏற்பாடுகளை கோவில் நிர்வாக பரம்பரை அறங்காவலர் திரு.B.S.சேஷாத்திரி அவர்கள் மற்றும் உபயதார்கள் செய்து இருந்தனர்.

**செய்தி: தேனே T.P.குமரன், மகர்நோம்புச் சாவடி, தஞ்சாவூர்**

# புகையில்லா போகி விழிப்புணர்வு பேரணி




மதுராந்தகம் . இந்து மேல்நிலைப்பள்ளி மாணவர்களின் "புகையில்லா போகி " விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது . மதுராந்தகம் நகராட்சி செயலாளர் மற்றும் தொழிலாளர்கள் கலந்து கொண்டனர்

# மானாமதுரை ஸ்ரீமஹா பஞ்சமுக ப்ரத்யங்கிரா தேவி கோவில் நிறுவனர் ஸ்ரீல ஸ்ரீஞான சேகர ஸ்வாமிகள் குருபூஜை விழா



**சிவகங்கை, ஜன, 13:** சிவகங்கை மாவட்டம் மானாமதுரை அருகே உள்ள வேதியேரேந்தல் விலக்கு பகுதியில் பஞ்சபூதேஸ்வரம் உள்ளது. தமிழகத்தில் பிரசித்தி பெற்ற மஹா பஞ்சமுக ப்ரத்யங்கிரா தேவி திருக்கோவில் உள்ளது. இதன் நிறுவனர் ஸ்ரீலஸ்ரீ ஞான சேகர ஸ்வாமிகள் கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் ஜீவசமாதி அடைந்தார்.

கோவில் வாளாகத்தில் சுவாமி ஜி அதிஷ்டானம் உள்ளது. இங்கு தினந்தோறும் பூஜைகள் நடைபெற்று வருகிறது. சுவாமி ஜி யின் முதல் ஆண்டு குருபூஜை விழா 14 ந்தேதி நடைபெறுகிறது. காலையில் விக்னேஸ்வர பூஜையுடன் தொடங்கி காலை 9 மணிக்கு திருவாசக சித்தர் கயிலை புனிதர் சிவ. தாமோதரன் ஐயாவின் திருவாசக விண்ணப்பப் பெருவிழா நடைபெறுகிறது.

பகல் 12 மணி அளவில் குருபூஜை, மகேஸ்வர பூஜை அன்னதானம் நடைபெறுகிறது. இதற்கான ஏற்பாடுகளை ஸ்ரீமாதாஜி தலைமையில் ஸ்ரீமஹா பஞ்சமுக ப்ரத்யங்கிரா வேத தர்ம ஷேத்ரா டிரஸ்ட் மற்றும் பக்தர்கள் செய்து வருகின்றனர்.

# சமூக நல அலுவலர் லதாவுக்கு சாதனை பெண்மணி விருது



**தஞ்சாவூர், ஜன.13:** தஞ்சாவூர் மாவட்ட சமூக நல அலுவலர் ஆர் டி லதாவுக்கு சாதனை பெண்மணி விருது வழங்கப்பட்டது. புதுமைப் பெண் திட்டம், குழந்தைத் திருமணம் தடுத்தல்,சாலையோரம் உலவும் ஆதரவற்ற முதியவர்களைக் கவனித்து முதியோர் இல்லத்தில் கொண்டு போய் சேர்த்தல், விதவைகள் மற்றும் கணவரால் கைவிடப்பட்ட பெண்களுக்கு வேலை வாய்ப்பு பயிற்சி அளித்தல், கல்லூரி மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை வழங்குதல். திருநங்கைகளுக்கு வெற்றி நிச்சயம் திட்டம் மூலம் வேலை வாய்ப்பு பயிற்சி வழங்கியும் சமுதாய வளர்ச்சியில் பணியாற்றி வரும் மாவட்ட சமூக நல அலுவலர் ஆர் டி லதா அவர்களுக்கு பொங்கல் பாட்டு பட்டிமன்றம் நிகழ்ச்சியில் தனியார் தொலைக்காட்சி சார்பாக சாதனை பெண்மணி விருது வழங்கப்பட்டது

# திட்டக்குடி அரசு மற்றும் கலை அறிவியல் கல்லூரியில் 326 மாணவ மாணவிகளுக்கு மடிக்கணினிகள்

## அமைச்சர் சி.வெ.கணேசன் வழங்கினார்



**கடலூர், ஜன.13:** திட்டக்குடி அரசு மற்றும் கலை அறிவியல் கல்லூரியில் அமைச்சர் சி.வெ.கணேசன் 326 மாணவ மாணவிகளுக்கு மடிக்கணினிகள் வழங்கினார்.

கடலூர் மாவட்டம் திட்டக்குடி அரசு மற்றும் கலை அறிவியல் கல்லூரியை சேர்ந்த 326 மாணவ மாணவிகளுக்கு ரூ.10 லட்சம் மதிப்பீட்டில் உலகம் உங்கள் கையில் திட்டத்தின் கீழ் மடிக்கணினிகளை தொழிலாளர் நலன் திறன் மேம்பாட்டு துறை அமைச்சர் சி.வெ.கணேசன் வழங்கினார்.

இந்நிகழ்வில் கல்லூரி முதல்வர் மணிகண்டன், ஒன்றிய செயலாளர் பட்டூர் அமிர்தலிங்கம், நகர செயலாளர் பரமகுரு, நகர துணை தலைவர் செந்தில்குமார், அயலக அணி அமைப்பாளர் சேதுராமன், நகர மன்ற உறுப்பினர் கொளஞ்சியப்பன், அனைத்து துறை கல்லூரி பேராசிரியர்கள், அலுவலர்கள், மாண மாணவிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். முடிவில் கல்லூரி நூலகர் லட்சுமிசங்கரி நன்றி கூறினார்.

### வேதாரண்யம் அருகே அருள்மிகு சந்தன மாரியம்மன் வழிபாடு மன்றத்தின் சார்பில்

# உலக நன்மைக்காகவும் விவசாயம் செழிக்க வேண்டி 40 ஆம் ஆண்டு திருவிளக்கு பூஜை



**நாகை, ஜன.13:** நாகை மாவட்டம் வேதாரண்யம் அருகே உள்ள கரியாப்பட்டினத்தில் அருள்மிகு சந்தன மாரியம்மன் எழுந்தருளி அப் பகுதி மக்களுக்கு அருள்பாளித்து வருகிறார்.

இந்தப் பகுதியில் உள்ள கிராம மக்கள் ஒவ்வொரு ஆண்டும் அருள்மிகு சந்தன மாரியம்மன் ஆலயம் அருகே திருவிளக்கு பூஜைகள் செய்வது வழக்கம்.

இந்த ஆண்டு உலக நன்மைக்காகவும் விவசாயம் இயற்கை இன்னலுக்கு உட்படாமல் சிறப்புடன் அமைய வேண்டும் என திருவிளக்கு பூஜையும்,பஜனைப் பாடல்களையும் பாடி மிகச் சிறப்பாக திருவிளக்கு பூஜையில் 150 க்கும் மேற்பட்ட பெண்கள் கண்டு தங்கள் குடும்பம் சரி தூங்கவும் இந்த ஆண்டு விவசாயம் செழித்து வாங்க வேண்டும் எனவும் அது போல் உலக மக்கள் நன்மை பெற வேண்டியும் இந்த திருவிளக்கு பூஜையில் ஏராளமான பெண்கள் கலந்து கொண்டு தங்கள் குடும்பம் செழிக்க வேண்டி அருள்மிகு சந்தன மாரியம்மனை பிரார்த்தனை செய்துவழிபாடு செய்தனர்.

# வலங்கைமான் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி பயிற்சி ஆசிரியருக்கு இளம் கல்வியாளர் விருது




**திருவாரூர், ஜன.13:** திருவாரூர் மாவட்டம் வலங்கைமான் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் ஆங்கிலப் பாட பட்டதாரி பயிற்சி ஆசிரியராக பணிபுரிந்து வருபவர் மாருதி மாலன். இவர் கும்பகோணம் கேஎஸ்கே கல்வியியல் கல்லூரியில் பி.எட்., பயின்று வருகிறார். இவர் நவீன தொழில் நுட்பங்களை பயன்படுத்தி மாணவர்களுக்கு ஆங்கிலப் பாடத்தை கற்பித்து வருகிறார்.

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் மூலம் ஆங்கிலப் பயிற்சிக்கான சிறு சிறு வீடியோக்களையும் தயாரித்திருக்கிறார். குறிப்பாக இவர் தயாரித்த கியூ ஆர் கோடுகள் அடங்கிய பயிற்சி ஏடு பள்ளி தலைமையாசிரியரால் பாராட்டப்பட்டது.

இதுபற்றிய செய்திகள் பத்திரிகைகளிலும், சமூக வலைத்தளங்களிலும் வெளியானதைத் தொடர்ந்து இவரது பணியைப் பாராட்டி திருப்பூர் தெற்கு ரோட்டரி சங்கம் இளம் கல்வியாளர் விருதினை அறிவித்தது.

தொடர்ந்து திருப்பூரில் நடைபெற்ற பொங்கல் விழாவில் இளங்கோ, மனோஜ் உள்ளிட்ட ரோட்டரி சங்க நிர்வாகிகள் மாருதி மாலனுக்கு இளம் கல்வியாளர் விருது வழங்கி கௌரவித்தனர்.

# பறவைகள் மட்டும் பறக்கும் வானம் ஹைக்கூ நூல் வெளியீட்டில் ஓவியக் கவிஞர் அமுதபாரதி நெகிழ்ச்சி




**சென்னை, ஜன.13:** 49 ஆவது சென்னை புத்தகக் காட்சியில் நூலேணி பதிப்பக அரங்கில் கவிஞர் அகவலன் அவர்கள் எழுதிய " பறவைகள் மட்டும் பறக்கும் வானம் " என்கிற ஹைக்கூ நூலினை ஓவியக்கவிஞர் அமுதபாரதி அவர்கள் வெளியிட உலகத்தமிழ் ஹைக்கூ கவிஞர்கள் மன்றத்தின் நிறுவுநர் முனைவர் கா.ந.கல்யாணசுந்தரம் அவர்கள் பெற்றுக்கொண்டார்.

நூலினை வெளியிட்டு கவிஞர் அமுதபாரதி அவர்கள் பேசுகையில் தமிழோடு தொடர்புகொண்டு தமிழ் இலக்கியம், கவிதை என வாழும் படைப்பாளிகளின் வாழ்நாள் நீடித்து இருக்கும் மேலும் ஹைக்கூ கவிதை நூல்கள் சமூக அக்கறையுடன் எழுதப்படுகின்றன எனவும் கூறினார்.

இவரது உரையில் தமக்கு சுரதா போன்றவர்களின் தொடர்பு ஆரம்பகாலம் முதலே இருந்து வந்தது... அவர் எனது நூல் வெளியீட்டில் " புத்தகமே இவரது சொந்தம் பொங்கும் புதுமைகள் இவர் விரும்பும் முத்தம் " என்று சொன்னது நினைவுக்கு வருகிறது எனக் குறிப்பிட்டு கலங்கினார் .

மேலும் பேசுகையில் ... கண்ணதாசன் காலத்தில் அவரது நூல்களுக்கு மேலட்டை ஓவியங்கள் வரைந்து வந்துள்ளேன்.

ஹைக்கூ உலகில் பல்லாண்டு களாக தடம் பதித்து வந்துள்ளேன். ஆனால் இன்னும் வாடகை வீட்டில்தான் வசித்து வருகிறேன். வீடு நிறைய புத்தகங்கள் நிறைந்துள்ளன. 87 வயதாகும் காலத்தில் புத்தக வாசிப்பால் பதினைந்து வயது குறைந்து காணப்படுகிறேன். இதனை கவிஞர் இந்திரன் அவர்கள் குறிப்பிட்டதாகவும் கூறினார். வயது முதிர்விலும் புத்தக காட்சி சாலைக்கு தள்ளாடியபடியே நடந்து வந்து நூலினை வெளியிட்டு கவிஞர் அகவலன் அவர்களது ஹைக்கூக்களைக் குறிப்பிட்டு வாழ்த்தினார்.

நூல் வெளியீட்டில் தன்முனைக் கவிதைகள் குழும செயல் தலைவர் ந.வேலாயுதம், நூலாசிரியர் அகவலன், பதிப்பாசிரியர் நூலேணி கவிஞர் கன்னிக்கோவில் இராஜா ஆகியோர் கலந்து கொண்டனர்.

அகவலன் ஏற்புரை நல்க , ந.வேலாயுதம் நன்றி கூறினார். 87 வயது நிறைந்த ஹைக்கூ சாதனையாளர் ஓவியக் கவிஞர் அமுதபாரதி அவர்களுக்கு தமிழக அரசு அடுக்குமாடி குடியிருப்புகளில் எஞ்சிய காலங்களில் வாழ இலவசமாக வீடு ஒன்றைக் கொடுத்தால் சிறப்பாக இருக்கும் என விழாவுக்கு வந்தவர்கள் அனுதாபத்தோடு பகிர்ந்துகொண்டதை அறிய முடிந்தது.

# விவேகானந்தரின் 163வது பிறந்த நாள் : உருவ சிலைக்கு மாலை அணிவிப்பு



**தஞ்சாவூர்,ஜன.13:** கும்பகோணம் ஜேசிஐ சார்பில் விவேகானந்தர் திருவுருவ சிலைக்கு மாலை அணிவிப்பு.

தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணம், சுவாமி விவேகானந்தரின் 163வது பிறந்தநாளை முன்னிட்டு, போர்ட்டர் டவுன் ஹாலி உள்ள அவரது உருவச் சிலைக்கு ஜே சி ஐ கும்பகோணம் மகாமகம் சிட்டி சார்பில் தலைவர் அருண்பிரகாஷ்,,தலைமையில் செயலாளர் ராஜசேகர், பொருளாளர் மோதீஸ்வரன் ஆகியோர் முன்னிலையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள்.உடன் உறுப்பினர்களான முகிலன், சந்தீப் ஆகியோர் இருந்தனர்.

# முதல் பரிசு வென்ற போளூர் கே.சரண்யா



திருவண்ணாமலை மாவட்டம் போளூரில் சமத்துவ பொங்கல் முன்னிட்டு கோலப் போட்டிகள் நடைபெற்றது. முதல் பரிசு வென்ற போளூர் கே.சரண்யா முதல் பரிசை திமுக மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் பெரணம்பாக்கம் ஏ. மணிகண்டன் பரிசு வழங்கினார் உடன் கழக நிர்வாகிகள் பொதுமக்கள் கலந்து

# மாணவ மாணவிகளுக்கு மடிக்கணினி



திருவண்ணாமலை அடுத்த வேங்கிக்காலில் அமைந்திருக்கும் அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் உலகம் உங்கள் கையில்" திட்டத்தின் கீழ் 313 மாணவ மாணவிகளுக்கு மடிக்கணினிகளை தமிழ்நாடு சட்டசபை துணை சபாநாயகர் கு.பிச்சாண்டி வழங்கினார் உடன் மாவட்ட ஆட்சியர் க.தர்ப்பகராஜ் கல்லூரி முதல்வர் அ.தனக்கீர்த்தி உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

# பொங்கல் விளையாட்டு போட்டி



கள்ளக்குறிச்சி அருகே உள்ள பரமனநத்தம் ஊராட்சியில் பொங்கலையொட்டி விளையாட்டுப் போட்டிகள் ஒன்றியக்குழு பெருந்தலைவர் அலமேலு ஆறுமுகம் தலைமையில் நடைபெற்றது. ஒன்றிய செயலாளர் எஸ்பி. அரவிந்தன், வடக்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் ஆனந்த் என்கிற இளஞ்செழியன் ஆகியோர் உடன் இருந்தனர்.

### இளையான்குடியில்

# கூடாரவல்லி உற்சவம் பக்தர்கள் 1008 தீபம் ஏற்றி வழிபாடு செய்தனர்



**மானாமதுரை, ஜன. 13 :** சிவகங்கை மாவட்டம் இளையான்குடியில் உள்ள சிவகங்கை தேவஸ்தானம் நிர்வாகத்திற்குட்பட்ட ஸ்ரீ மதன் வேணு கோபாலப்பெருமாள் கோவிலில் மார்கழி 27'ஆம் கிழமையை கூடாரைவல்லி உற்சவத்தை முன்னிட்டு அதிகாலையில் திருப்பாவை பாடல்கள் பாடப்பட்டு ஆண்டாள் திருக்கோலத்தில் பிரகார வலம் வந்தார்.

அதைத்தொடர்ந்து மாலை பெருமாளுக்கு நெய் பொங்கல் பிரசாதம் படைக்கப்பட்டு அனைத்து சன்னதிகளிலும் கலர் கோலங்கள் போடப்பட்டு 1008 அகல்விளக்கு தீபங்கள் ஏற்றப்பட்டன.

பெண்கள் திருமண பாக்கியம் வேண்டி ஆண்டாள் அருளிய திருப்பாவை மற்றும் வாரணமாயிரம் ஆகிய திவ்ய பிரபந்த பாசுரங்களை பாடிவழிபட்டனர். இதற்கான ஏற்பாடுகளை இளையான்குடி பக்தர்கள் செய்திருந்தனர்.

# கவிதை அரங்கம்!






சிந்தித்து செயல்படு
அதுவே வெற்றியை
சந்திக்கும் செயல்பாடு

வெற்றியின் பரம ரகசியம்
எங்கே ஒளிந்திருக்கிறது
தெரியுமா நீ செய்வதை
விரும்பி செய்வதில்
தான் இருக்கிறது

வெற்றியும் தோல்வியும்
இரண்டு படிக்கட்டுகளே
ஒன்றில் உன்னை
உணர்ந்து கொள்வாய்
மற்றொன்றில் உன்னை
திருத்திக்கொள்வாய்

எதைக் கண்டும்
நம்பிக்கை தளராதே
தோல்வியும் வெற்றியிடம்
தோற்க்கத்தானே
செய்கிறது

## வாழ்க்கை தத்துவம்...



இன்றைய இலட்சியம்
நாளைய சாதனை
இன்றைய அலட்சியம்
நாளைய சோதனை

நாம சிரிக்கனும்னு
நினைக்குறவங்க முன்னாடி
சிரிப்பே வரலைனாலும்
சிரிக்கனும்
நாம அழனும்னு நினைக்குறவங்க
முன்னாடி அழுகையே வந்தாலும்
அழக்கூடாது

அளவான சாப்பாடு
உடலுக்கு நன்மை
அளவோடு பழக்கம்
உறவுக்கு நன்மை

மகிழ்வான நேரங்கள்
நல்ல நியாபகங்கள் ஆகிறது
கடினமான நேரங்கள்
நல்ல பாடங்கள் ஆகிறது

# சிங்கப் பெண்ணே!!!



ஜானகி அப்பாவின் செல்ல மகள். நன்றாக படித்தவள் .கல்லூரியில் முதலாவதாக வந்து முதுகலை பட்டம் பெற்றவள். ஆதலால் அவளுக்கு பெரிய கம்பெனியில் வேலை நல்ல சம்பளத்துடன் கிடைத்தது. அவள் அப்பா நாராயணன் மிகுந்த பெருமையுடன் தன் சந்தோஷத்தை நண்பர்கள், உறவினர்கள் எல்லோரிடமும் ஜானகியை பற்றி பெருமையாக சொல்லிக்கொண்டார். நண்பர்களும் சந்தோஷப்பட்டனர். நல்ல விஷயம் தான் அடுத்தது என்ன பெண்ணுக்கு கல்யாணம் தானே? நாராயணா !எப்ப கல்யாணம் சாப்பாடு போட போற? என்று எல்லோரும் கேட்க ஆரம்பித்தார்கள். நாராயணனும் மாப்பிள்ளை பார்க்க ஆரம்பித்து மூன்று மாதத்தில் திருமணமும் நடந்தது .மாப்பிள்ளை ஊர் மதுரை என்பதால் திருமணம் முடிந்து மதுரைக்குச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது ,ஆதலால் தொடர்ந்து அவளால் வேலைக்கு போக முடியவில்லை. தன்னுடைய வேலையை ராஜினாமா செய்தாள். மதுரைக்கு போய் வேறு வேலை தேடிக் கொள்ளலாம் என்று முடிவு செய்தாள். மாமியார், மாமனார் உடன் கூட்டுக் குடித்தனம். மாமியார் ஜானகி முதலில் நன்றாக ஆசையுடன் கவனித்துக் கொண்டாள் .பிறகு மெல்ல மெல்ல அவருடைய சுயரூபம் தெரிய ஆரம்பித்தது. பையன் வீட்டில் இருக்கும்போது மருமகளை எந்த ஒரு வேலையும் செய்ய விடமாட்டாள். தானே எல்லா வேலையும் இழுத்துப் போட்டுக் கொண்டு செய்வாள். பையன் ஆபீசுக்கு சென்றவுடன் அப்படியே மாறி விடுவாள். மருமகளை வேலை செய்யச் சொல்லுவாள். ஜானகியும் எல்லா வேலையும் செய்து கொண்டிருந்தாள். மாலை 7:00 மணிக்கு பையன் வீட்டுக்கு வரும்போது தானே வந்து காபி கொடுப்பாள் .அவனுக்கு வேண்டிய எல்லா வேலையும் தானே செய்வாள் . ஜானகிக்கு ஒன்றும் புரியவில்லை. ஒரு மாதம் சென்றது. ஜானகி நான் மீண்டும் வேலைக்கு செல்கிறேன் இரண்டு கம்பெனிக்கு அப்ளிகேஷன் போட்டிருக்கிறேன் என்று தன் கணவரிடம் சொன்னாள். இதை கேட்டுக் கொண்டே வந்த அவளது மாமியார் வேண்டாம் இப்பொழுது தான் உனக்கு திருமணம் ஆயிருக்கு கொஞ்ச நாள் ஜாலியா இரு அப்புறம் போகலாம் என்றாள். ரகுவும் நானே நல்ல சம்பளம் வாங்குகிறேன். நீ ஏன் வேலைக்கு போய் கஷ்டப்படணும். அம்மா கிட்ட சமையல் நல்லா கத்துக்கோ, வீட்டு வேலையும் செய்ய கத்துக்கோ அப்புறம் பார்க்கலாம் என்று சொன்னான் .அவளால் ஒன்றும் செய்ய முடியவில்லை சரி என்று கூறிவிட்டாள். இரண்டு மாதம் சென்றது. ஜானகி எந்த வேலை செய்தாலும் அவள் மாமியார் ஏதாவது குறை சொல்லிக் கொண்டே இருந்தாள்.எல்லா வீட்டு வேலையும் ஜானகியை செய்யச் சொன்னாள். கஷ்டமாக இருந்தது. ஒரு நாள் இரவு தன் கணவரிடம் மாமியார் மங்கலத்தை பற்றி கூறினாள்.ரகு அதே ஒத்துக் கொள்ளவில்லை .தன் அம்மா நல்லவள் அவள் அப்படியெல்லாம் செய்ய மாட்டாள் என்றான் .அதற்கு ஜானகி நீங்கள் இருக்கும் போது ஒன்றும் சொல்ல மாட்டார்கள் ஆனால் நீங்கள் வீட்டிற்கு வெளியே சென்ற பிறகு சண்டை போட ஆரம்பித்து விடுவார்கள் என்றாள். அவனால் நம்ப முடியவில்லை நீ சும்மா என் அம்மா மீது குறை சொல்கிறாய் என்று கூறிவிட்டான் .மறுநாள் காலையில் அவன் அம்மாவிடம் நீ ஜானகியிடம் சண்டை போடுகிறாயா? என்று கேட்டான் .அதற்கு மங்கலம் இல்லவே இல்லை ...அவளை என் மகள் மாதிரி பார்த்துக் கொள்கிறேன் என்றாள். நீ தான் பார்க்கிறாயே நான் எப்படி அவளை கவனித்துக் கொள்கிறேன், என்று பயங்கரமாக நடித்தாள். அவனும் சரி என்று சொல்லிவிட்டு ஜானகியை சமாதானப்படுத்தி விட்டான் .ரகு வந்து தன்னிடம் இப்படி கேள்வி கேட்டதால் அவளுக்கு மேலும் கோபம் அதிகரித்தது. மறுநாளில் இருந்து ஜானகியை ஒரு வேலைக்காரி போல் நடத்த ஆரம்பித்தாள். மாமியாருக்கும், மருமகளுக்கும் அடிக்கடி சண்டை வர ஆரம்பித்தது. ஜானகிக்கு ஒரே மன உளைச்சல் ஏற்பட்டது. ரகுவிடம் சொல்லுவதால் ஒரு பிரயோஜனமும் இல்லை .என்ன செய்வது ?என்று யோசித்தாள் .மறுநாள் வேலையை சீக்கிரம் முடித்துவிட்டு பக்கத்து தெருவில் உள்ள லைப்ரரிக்கு சென்று ஏதாவது புத்தகம் படித்தாலாவது பொழுது போகும். மாமியாரிடம் இருந்து கொஞ்ச நேரம் தப்பிக்கலாம் என்று கிளம்பினாள் .அங்கு சென்று பார்த்தபோது ஆச்சார்யா சாணக்கியரின் புத்தகம் கண்ணில் பட்டது .அதை எடுத்து படித்தாள். வீட்டுக்குள்ளேயே எதிரி இருந்தால் அவர்களை எப்படி தந்திரமாக ஜெயிக்கலாம் என்ற தலைப்பில் அறிவுரைகள் எழுதப்பட்டிருந்தது. அதை படித்தவுடன் அவளுக்கு ஒரு புத்துணர்ச்சி கிடைத்தது .அந்த புத்தகத்தில் உள்ள முக்கியமான மூன்று அறிவுரைகள் அவளுக்கு ஆதரவு தரும் வகையில் இருந்தது .

1. எதிரிகள் உன் பலவீனத்தை வைத்து முதலில் உன்னை தாக்குகிறார்கள். உன் மனதை புண்படுத்துகிறார்கள்.உன்னை சண்டையிட தூண்டுகிறார்கள். ஏனென்றால் உன்னை கெட்டவளாக மற்றவரிடம் காட்டுவதற்காக.

2.நீ தன்னம்பிக்கையை இழந்து விடக்கூடாது. உன் பேச்சு எடுபடாத இடத்தில் தேவையில்லாமல் சண்டையும் போடக்கூடாது.

3 . உனக்கான காலம் வரும்வரை நீ பொறுமையாக இரு. எதிரியின் அகங்காரம் அதிகமாகும் போது அவர்களுடைய பலவீனத்தால் ஏதாவது தவறு செய்து மாட்டிக்கொள்வார்கள். அவர்களுடைய சுயரூபம் தெரியும். அப்போது மற்றவர்கள் முன் நடிப்பதை எல்லோரும் கண்டுபிடித்து விடுவார்கள் அதுவரை காத்திரு, என்று எழுதப்பட்டிருந்தது. அதை படித்தவுடன் பெருமூச்சு விட்டபடி..... தானும் ஜெயித்து விடலாம் என்ற தன்னம்பிக்கையுடன் வீட்டிற்கு கிளம்பினாள் சிங்கப்பெண் ஜானகி.

**எம்.எல்.பிரபா,**
ஆதம்பாக்கம்

## சிரிப்பு வருது.! சிரிப்பு வருது.!!



*மிருகக் காட்சி சாலையில் புலி ஒன்று, பார்வையாளரில் ஒருவனைக் கொன்றுவிட்டது. அதைக் கண்டு பக்கத்து கூண்டில் இருந்த எலி கேட்டது. எதுக்கு அவனைக் கொன்னேனு...*

*புலி : அந்தப் பரதேசி நாய் மூணு மணி நேரமா என்னைப் பார்த்துச் சொல்றான் "எவ்ளோ பெரிய பூனை"ன்னு.*



# தினம் ஒரு சமையல்



## மிளகு - பூண்டுக் குழம்பு

தேவையான பொருட்கள்:

| | |
|---|---|
| 1. பூண்டு(உரித்தது) | - ஒரு கப் |
| 2. தனியா | - 3 டேபிள் ஸ்பூன், |
| 3. மிளகு | - 2 டேபிள்ஸ்பூன், |
| 4. காய்ந்த மிளகாய் | - 4, |
| 5. உளுத்தம் பருப்பு, சீரகம் | - தலா 2 டீஸ்பூன், |
| 6. கடலைப்பருப்பு | - ஒரு டீஸ்பூன், |
| 7. கறிவேப்பிலை | - ஒரு கைப்பிடி, |
| 8. புளி | - சிறிய உருண்டை, |
| 9. நல்லெண்ணெய் | - ஒரு டேபிள்ஸ்பூன், |
| 10. கடுகு | - அரை டீஸ்பூன். |
| 11. உப்பு | - தேவையான அளவு |

செய்முறை:

1. முதலில் ஒரு பாத்திரத்தில் புளியை கரைத்து கொள்ளவும். கடாயில் தனியா, மிளகு, காய்ந்த மிளகாய், உளுத்தம்பருப்பு, கடலைப்பருப்பு ஆகியவற்றை சிவக்க வறுத்து ஆறிய பின்னர் மிக்ஸியில் போட்டு பொடிக்கவும்.



2. சீரகம், கறிவேப்பிலையைப் பச்சையாக அரைத்துக்கொள்ளவும். கரைத்த புளித்தண்ணீரில் கறிவேப்பிலை விழுது, வறுத்து அரைத்த பொடி, உப்பையும் போட்டுக் கட்டி இல்லாமல் கரைத்து வைத்துக்கொள்ளவும். கடாயில் அரை ஸ்பூன் எண்ணெய் விட்டு உரித்த பூண்டு சேர்த்து, லேசாகச் சிவக்கும் வரை வதக்கவும்.

3. அடுத்து அதில் புளிக்கரைசலைச் சேர்த்து, நன்றாகக் கொதிக்கவிடவும். கெட்டியானதும் இறக்கவும். மீதம் உள்ள எண்ணெயில் கடுகு, கறிவேப்பிலை தாளித்துச் சேர்க்கவும். சுவையான சத்தான பூண்டு - மிளகுக்குழம்பு ரெடி.

## நுணா பயன்கள்



நுணாமரத்தின் அற்புத மருத்துவ குணங்கள்: தலை முதல் கால் வரை பலன் தரும் ஒரு மரம்!

மஞ்சணத்தி மரம் நுணாமரம் என்றும் அழைக்கப் படுகிறது. இது சிறு மரமாகும். மேலும் இது பல மருத்துவ குணங்களைக் கொண்டிருப்பதால் பல நூற்றாண்டுகளாக பயன்படுத்தப்படுகிறது.

இதன் இலைகள், வேர், மற்றும் பட்டை ஆகியவை மருத்துவத்தில் பயன்படுத்தப்படுகின்றன.

காடுகளில், மலைகளில் வளரக்கூடிய மரம். சர்வசாதாரணமாக, வீட்டுத் தோட்டங்களிலும், வேலி ஓரங்களிலும் செழித்து வளரும் ஒரு மரம். தரிசு நிலங்களிலும் வளரும். இது இயற்கையின் பெரும் கொடை என்றே சொல்லலாம்.

பயன்கள்

இதில் செலினியம், துத்தநாகம் போன்ற தாது உப்புகள் இயற்கையாகவே இருக்கின்றன. நுணா மரம் வெப்பம் தணிக்கும். வீக்கம் கரைக்கும். மந்தத்தை போக்கும், கல்லீரல் மண்ணீரல் கோளாறுகளை தீர்க்கும். பசியை தூண்டும் தோல் நோயை போக்கும்.

இதன் முக்கிய அம்சங்கள்

இதன் வேறு பெயர்கள் குணா மஞ்சள் நாளி தணக்கு மஞ்சள் பாவட்டை. இதன் உயரம் சுமார் 15 அடி வரை வளரும் தடிப்பான பட்டை இது இதரடுக்கையில் அமைந்த இலைகள், நாற்கோண சிறு கிளைகள், சிறிய வெண்ணிற மலர்கள், முடிச்சு முடிச்சாக காய்கள் கருப்பு நிற பழங்கள். மரத்தின் உட்புறம் மஞ்சள் நிறத்தில் இருக்கும்.

நுணா இலை மைய அரைத்து புண், சிரங்குகளில் வைத்துக் கட்டினால் குணமாகும்.

இலையை இடித்து பிழிந்து சாறு எடுத்து இடுப்பு வலி உள்ள இடங்களில் பூசினால் குணம் கிடைக்கும்.

இலையை அரைத்து சாறு எடுத்துத் தொண்டையில் பூசி வந்தால் தொண்டை நோய்கள் நீங்கும்.

நுணாமர வேரை நசுக்கி அரை லிட்டர் நீரில் போட்டு ஒரு டம்ளராக சுண்ட காய்ச்சி வடிகட்டி குடித்தால் பேதி நிற்கும்.

நுணா மரத்தின் காய்களை உப்பு நீரில் ஊறவைத்து வெயிலில் காயவைத்து சுட்டு கரியாக்கி சலித்து தினமும் பல் துலக்கினால் சொத்தைப்பல் வராது.

இதன் சிறப்புக்கள்

வேர் முதல் இலை வரை அனைத்துமே மருத்துவ குணங்களைக் கொண்டது மலச்சிக்கல், கோளாறுகள் மற்றும் உடல் தளர்ச்சியை நீக்க உதவுகிறது. மேலும் இது கோழிகளுக்கு உணவாகவும் பயன்படுகிறது.

# பராசக்திக்கு வெளிநாட்டில் குவியும் வசூல்.. எவ்வளவு தெரியுமா? அமரன் படத்தை விட அதிகம் தான்



சிவகார்த்திகேயனின் பராசக்தி படம் கடந்த ஜனவரி 10ம் தேதி ரிலீஸ் ஆகி இருந்தது. ஹிந்தி எதிர்ப்பு போராட்டதற்கு மையப்படுத்தி எடுக்கப்பட்ட இந்த படமும் ஜனநாயகன் போல சென்சாரில் பிரச்சனைகளை சந்தித்தது.

ஆனால் பல வசனங்களை மியூட் செய்யவும், சில காட்சிகளை நீக்கவும் படத்தின் தரப்பு ஒப்புக்கொண்டதால் சென்சார் சான்றிதழ் வழங்கப்பட்டது. முதல் நாளில் உலக அளவில் 27 கோடி ரூபாய் பராசக்தி வசூலித்து இருக்கிறது. இதில் வெளிநாட்டில் வந்த வசூல் பெரிய பங்கு ஆகும்.

பராசக்தி வெளிநாட்டில் மட்டும் 12.8 கோடி ரூபாய் வசூல் வந்திருப்பதாக தகவல் வந்திருக்கிறது. இது சிவகார்த்திகேயனின் அமரன் பட வசூலை விட அதிகம்.

குறிப்பாக UKவில் முதல் நாளில் மட்டும் £87,842 வசூல் வந்திருப்பதாக அதிகாரபூர்வ அறிவிப்பு வந்திருக்கிறது. இது இந்திய ரூபாய் மதிப்பில் 1.06 கோடி ரூபாய் ஆகும்.



சினிமா

பட ப்ரோமோஷன் நிகழ்ச்க்கு ஆஷிகா அழகாக தாவணியில் வந்து இருக்கும் புகைப்படங்கள் ரசிகர்களை கவர்ந்து வருகிறது. அழகாக இருக்கும் புகைப்படங்கள் இதோ.

# ராஜா சாப் படம் 3 நாட்களில் உலகளவில் செய்துள்ள வசூல்.. எவ்வளவு தெரியுமா



தி ராஜா சாப்

பான் இந்தியன் ஸ்டாராக ரசிகர்களால் கொண்டாடப்பட்டு வருபவர் பிரபாஸ். பாகுபலி படத்திற்கு பின் மாபெரும் நட்சத்திர அந்தஸ்தை பெற்றார்.

ஆனால், இதற்குப்பின் இவர் நடிப்பில் வெளிவந்த படங்கள் பெரிதும் வெற்றிபெறவில்லை. சலார் படம் மட்டுமே ரசிகர்களால் ஓரளவு கொண்டாடப்பட்டது.

இதை தொடர்ந்து இவர் நடிப்பில் வெளிவந்துள்ள படம்தான் தி ராஜா சாப். இயக்குநர் மாருதி இயக்கத்தில் உருவான இப்படத்தில் மாளவிகா மோகனன், நிதி அகர்வால், ரிதி குமார் ஆகியோர் நடித்திருந்தனர். ரசிகர்கள் மத்தியில் பெரும் எதிர்பார்ப்புடன் வெளிவந்த இப்படம் மோசமான விமர்சனங்களை பெற்று வருகிறது.

இந்த நிலையில், ராஜா சாப் படத்தின் 3 நாட்கள் வசூல் விவரம் வெளியாகியுள்ளது. அதன்படி, 3 நாட்களில் உலகளவில் இப்படம் ரூ. 160 கோடி வசூல் செய்துள்ளது.

# பாஞ்சாலிக்கு பீஷ்மர் கொடுத்த வரம்

பாரத போரில் பாண்டவர்களுக்கும் கௌரவர்களுக்கும் இடையிலான யுத்தத்தில் ஒன்பது நாட்கள் முடிந்துவிட்டன. 'ஒன்பது நாட்கள் கடந்தும் பாண்டவர்களை வீழ்த்த முடியவில்லையே!' என்று நினைத்த துரியோதனன், மகாரதராக இருந்த பீஷ்மரிடம் தான் கொண்டிருந்த நம்பிக்கையை இழந்துவிட்டான்.

தாத்தா பீஷ்மர், பாண்டவர்களை ஒழிக்க வேண்டும் என்ற உறுதியுடன் போரிடவில்லை என்றே அவன் நினைத்தான். தன் எண்ணத்தை மிகக் கோபத்துடன் பீஷ்மரிடமும் தெரிவித்தான். துரியோதனின் கடுமையைக் கண்ட பீஷ்மரும், அதே கடுமையுடன் மறுநாள் போரில் பாண்டவர்களை அடியோடு வீழ்த்துவதாக சபதம் செய்தார். ஆனால், துரியோதனனோ, பாண்டவர்களை வீழ்த்துவேன் என்று சொல்லாதீர்கள். அவர்களைப் போரில் கொல்வேன் என்று சொல்லுங்கள், என்றான். செஞ்சோற்றுக் கடனைத் தீர்க்க வேண்டுமே என்பதற்காக பீஷ்மரும், "அப்படியே ஆகட்டும்" என்று கூறிவிட்டார். அதே தருணத்தில் தொலைவில் பாண்டவர்களின் பாசறையில் இருந்த கண்ணன் லேசாகச் சிரித்தான். அவனுடைய சிரிப்பின் காரணம் அங்கிருந்த பாண்டவர்களுக்குப் புரியவில்லை. சிறிது நேரத்தில், பீஷ்மர் செய்த சபதம் பாண்டவர்களுக்குத் தெரியவந்தது. அர்ஜுனன் உட்பட அனைவருக்கும் கலக்கம் ஏற்பட்டுவிட்டது. பிதாமகர் பீஷ்மர் எவராலும் வெற்றி கொள்ள முடியாதவர் ஆயிற்றே. நன்றிக் கடனுக்காக அவர் துரியோதனன் பக்கம் இருந்தாலும், தர்மம் வெல்லும் என்று நமக்கு ஆசி கூறியவர் ஆயிற்றே. அவரே இப்போது நம்மை ஒழிப்பதாக சபதம் செய்திருப்பதால், நிலைமை நமக்கு பாதகமாகத்தானே இருக்கும் என்று நடுங்கினார்கள். பாண்டவர்களின் இந்த சோர்வையும் கலக்கத்தையும் கண்ட பாஞ்சாலி, மிகவும் கவலை கொண்டாள். இனி தன்னுடைய சபதம் என்னாவது? போரின் திசையே மாறிவிடும் போலிருக்கிறதே. இந்தக் கண்ணன் என்ன ஆனார். அவருக்கு இதெல்லாம் தெரியுமா? இப்படியெல்லாம் பாஞ்சாலி நினைத்துக் கொண்டிருந்தபோதே, கண்ணன் அங்கே வந்து சேர்ந்தான். பாஞ்சாலியைப் பார்த்து, "சத்தம் செய்யாமல் என் பின்னால் நடந்து வா" என்று மிக மெல்லிய குரலில் கூறி, அந்த நள்ளிரவில் அவளை எங்கேயோ அழைத்துச் சென்றான். போர்க்களத்தினூடே கண்ணன் நடந்து சென்றுகொண்டிந்தான். ரணகளமாக மாறியிருந்த யுத்தபூமியில் மரண அவஸ்தையில் வீரர்கள் எழுப்பிய அவலக் குரல்களின் ஒலி, அந்தப் பிரதேசத்தையே அமானுஷ்யமாக மாற்றியிருந்தது.

ஆனாலும், கண்ணன் உடனிருக்கிறான் என்ற தைரியத்தில் பாஞ்சாலிக்குச் சிறிதும் அச்சம் ஏற்படவில்லை. எதையும் பொருட்படுத்தாமல் கண்ணனின் பின்னால் தைரியமாக தொடர்ந்து சென்றுகொண்டிருந்தாள். யுத்தகளத்தைவிட்டுச் சற்று விலகியதும் மற்றொரு சத்தம் கேட்டது. அரசகுலத்தில் பிறந்தவள் ஆதலால், பாஞ்சாலி அணிந்திருந்த விலையுயர்ந்த காலணிகள் எழுப்பிய ஓசைதான் அது.

திடீரென்று ஓரிடத்தில் நின்ற கண்ணன், பாஞ்சாலியைப் பார்த்து, சகோதரி, உன் காலணிகள் மிகவும் சத்தமெழுப்புகின்றன, அவற்றைக் கழற்றிப் போடு என்று கூறினான். பாஞ்சாலியும் அப்படியே காலணிகளைக் கழற்றி வீசினாள். பின்னர், தொலைவிலிருந்த ஒரு கூடாரத்தைச் சுட்டிக் காட்டிய கண்ணன், பாஞ்சாலி, நீ எவரும் அறியாமல் அந்தக் கூடாரத்துக்குச் செல். அங்கே உள்ளே குறுக்கும் நெடுக்குமாக நடந்துகொண்டிருக்கும் மனிதரின் காலில் விழு. மற்றபடி ஏன், எதற்கு என்றெல்லாம் கேட்காதே என்றான். பாஞ்சாலியும் கண்ணன் சொன்னபடியே கூடாரத்துக்குள் சத்தம் செய்யாமல் நுழைந்தாள். அங்கே ஒரு மனிதர் குறுக்கும் நெடுக்குமாக நடந்துகொண்டிருந்தார். அவர் திரும்பிப் பார்ப்பதற்குள் அவருடைய காலில் விழவேண்டும் என்ற வேகத்துடன் அவருடைய கால்களில் விழுந்தாள் பாஞ்சாலி. யாரோ ஒரு பெண் தன் காலில் விழுவதைக் கண்ட பீஷ்மர், "தீர்க்கசுமங்கலியாக இரு பெண்ணே" என்று வாழ்த்தினார். பின்னர் அவளை எழுந்திருக்கச் சொன்னதுடன், அவள் யாரென்றும் கேட்டார். பாஞ்சாலி எழுந்தாள். அவளைப் பார்த்ததுமே பீஷ்மர் திடுக்கிட்டார். அய்யோ இவளையா வாழ்த்தினோம்? என்று தனக்குள் மருகினார். நாளைய போரில் யாரை ஒழித்துக்கட்டப்போவதாக துரியோதனனுக்கு வாக்களித்திருந்தாரோ, அந்தப் பாண்டவர்களின் பத்தினியை, "தீர்க்கச் சுமங்கலியாக இரு" என்றல்லவா வாழ்த்திவிட்டார். தெய்வம் தன்னை மிகவும் சோதிப்பதாக எண்ணி வருந்தினார் பீஷ்மர்.



பாஞ்சாலியைப் பார்த்த பீஷ்மர், அம்மா பாஞ்சாலி, பிணங்கள் குவிந்திருக்கும் இந்த யுத்தக் களத்தினூடே நீ தனித்தா வந்தாய்? உன்னை யார் இங்கே அழைத்து வந்தார்கள்? என்று கேட்டார். அப்போது கூடாரத்தின் வாயிலில் ஏதோ நிழல் அசைவதுபோல் தெரிந்தது. அங்கே கண்ணன் நின்றுகொண்டிருந்தான். இப்போது பீஷ்மருக்கு என்ன நடந்திருக்கும் என்பது புரிந்துவிட்டது. வா கண்ணா, வா. இது உன் வேலையாகத்தான் இருக்கும் என்று நான் நினைத்தேன். இது என்ன கையில் ஏதோ துணிமுடிச்சு? என்று கேட்டார். ஓ, இதுவா? பாஞ்சாலியின் பாதணிகள்தாம் இவை. அதிக ஓசை எழுப்பவே கழற்றச் சொன்னேன். அதைத்தான் என் உத்தரியத்தில் முடிந்துவைத்திருக்கிறேன் என்றான். கண்ணன் சொன்னதுதான் தாமதம். திரௌபதி பாய்ந்து சென்று அதைப் பிடுங்கினாள். கண்ணா.! இது என்ன சோதனை. என் காலணிகளை நீ சுமப்பதா? என்னை மகாபாவியாக்க வேண்டுமென்பதுதான் உன் எண்ணமா? அவள் கண்கள் கண்ணீரை உகுத்தன. தங்கையின் செருப்பை அண்ணன் தாங்குவது தவறல்ல. பேசாதிரு. பெரியவர் பீஷ்மரிடம் உன் கோரிக்கையை சொன்னாயல்லவா, என்றான் கண்ணன். உடனே பீஷ்மர் குறுக்கிட்டு, மாயவனே! அவள் ஏதும் என்னிடம் சொல்லவில்லை. ஆனால், நான் என்ன சொல்ல வேண்டுமென்று நீ தீர்மானித்திருக்கிறாயோ அதை நான் அந்தப் பெண்ணுக்கு ஆசி மொழியாகச் சொல்லிவிட்டேன். நீ பொல்லாதவன். உன்னை அபயம் என்று எண்ணி இருப்போரைக் காக்க, அவர்களின் பாதணிகளைக் கூட தாங்கிக்கொண்டிருப்பாய். பாண்டவர்களுக்கு உன் அருள் இருக்கும்போது இந்த பீஷ்மனால் அவர்களை என்ன செய்துவிட முடியும்? கோபாலா, நீ யார் என்பதை நன்றாக அறிந்தவன் நான். ஏதோ உணர்ச்சிவசத்தில் என்னால் எல்லாம் ஆகுமென்று நினைத்துவிட்டேன். அந்தத் தவற்றைச் சுட்டிக்காட்ட, பக்தர்களை ரட்சிக்கும் பக்தவத்சலனாக இப்படி பாஞ்சாலியின் பாதணிகளைச் சுமந்து வந்து நிற்க வேண்டுமா? என்று வினவினார். அப்போது பிதாமகரின் கண்களிலும் நீரருவிகள் கொப்பளித்தன. மறுநாள் போரில் அந்தப் பழுத்த பழம் அம்புப் படுக்கையில் நிலைகுலைந்து விழுந்ததைத்தான் மகாபாரதம் சொல்லுமே. சர்வம் ஸ்ரீ கிருஷ்ணார்ப் பணம் ஓம் நமோ நாராயணா



-சிவ.முத்து லட்சுமணன்
போச்சம்பள்ளி

# தினம் ஒரு தலைவர்கள்

# கருமுத்து தியாகராஜன் செட்டியார் வரலாறு

கலைத் தந்தை என்று போற்றப்பட்டவரும், கல்வியாளருமான கருமுத்து தியாகராஜன் செட்டியார் சிவகங்கை மாவட்டத்தில் (1893) பிறந்தவர். குடும்பம் இலங்கையில் துணி வணிகத்தில் ஈடுபட்டிருந்தது. கொழும்பு புனித தாமஸ் கல்லூரியில் கல்வி கற்றார். இலங்கையில் தமிழர்களுக்கு அடையாள சூடு போடும் வழக்கத்தை தடுத்து நிறுத்தக் காரணமாக இருந்தவர். இலங்கை மலையகத் தோட்டத் தொழிலாளர் நலனுக்காக ஒரு பத்திரிகை நடத்தினார்.

இந்தியா திரும்பியவர், காங்கிரஸில் 1917-ல் சேர்ந்து தொழிலாளர் தலைவராக வும், மாகாண காங்கிரஸ் கமிட்டி செயலாளராகவும் இருந்தார். மதுரையில் 1925-ல் மீனாட்சி மில் நிறுவனத்தைத் தொடங்கி, நூற்பாலை, நெசவு ஆலையையும் அமைத்தார். தொடர்ந்து பல ஊர்களில் நூற்பு ஆலைகளை நிறுவினார். மீனாட்சி ஆலையின் ஆரம்பகால இயக்குநர்களாக தேசியத் தலைவர்கள் பலரும் இருந்துள்ளனர். மகாத்மா காந்தி, நேதாஜி உள்ளிட்ட தலைவர்கள் மதுரைக்கு வந்தபோது இவரது விருந்தினர்களாகத் தங்கினார்கள் என்று கூறப்படுகிறது.

இளம் வயதிலேயே புத்தகம் படிப்பதிலும் தமிழ் இலக்கண, இலக்கியங்களிலும் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டவர். தொல்காப்பியத்தின் ஆங்கில மொழிபெயர்ப்பு உட்பட பல நூல்கள் வெளிவர அதிகம் பொருளுதவி செய்துள்ளார். சென்னை தமிழிசை சங்கம், மதுரை திருவள்ளுவர் கழகம், காரைக்குடி கம்பன் கழகம், உ.வே.சாமிநாத ஐயர் நிலையம் போன்ற ஏராளமான அமைப்புகளுக்கு நன்கொடை வழங்கியுள்ளார்.

நலிந்த ஆலைகளை ஏற்று தொழில்நுட்பத்தை மேம்படுத்தி, வெற்றிகரமாக நடத்தியவர். இந்தியாவின் மாபெரும் தொழில் மேதைகளில் ஒருவராகத் திகழ்ந்தார். தொழிலாளர்கள், இதர ஆலை முதலாளிகள் மத்தியில் பெருமதிப்பும் மரியாதையும் பெற்றவர். ஆலைகளின் உரிமைக்காக தொடர்ந்து குரல் கொடுத்தவர்.

ஏராளமான கல்லூரிகள், பள்ளிகள் தொடங்கி கல்விப் பணியாற்றினார். 'தமிழ்நாடு' என்ற நாளிதழை பல ஆண்டுகள் நடத்தினார். இவர் கட்டிடக் கலைஞரும்கூட. இசை, ஓவியம், குதிரைச் சவாரியிலும் ஆர்வம் உள்ளவர். தினமும் திருவாசகம் ஓதும் வழக்கம் கொண்டவர்.



மத்திய அரசின் கட்டாய இந்திக் கல்வி திட்டத்தை எதிர்த்தார். இதனால், காங்கிரஸில் இருந்து விலகினார். இந்தி எதிர்ப்பு இயக்கம் நடத்திய சோமசுந்தர பாரதியார், பெரியாருக்கு உறுதுணையாக இருந்தார்.

ஆங்கிலத்தில் நல்ல புலமை பெற்றபோதிலும் ஆங்கிலம் கலவாது தமிழில் பேசி, எழுதுவார். ராமநாதபுரம் சேதுபதி, பண்டித மணி, பேராசிரியர் ரத்தின சபாபதி ஆகியோரின் நூல் நிலையங்களை விலைக்கு வாங்கி மேம்படுத்தினார்.

தன் மனைவியை தமிழில் அரிச்சுவடியில் இருந்து கற்க வைத்து, ஆராய்ச்சிக் கட்டுரைகள் எழுதுவது, சொற்பொழிவுகள் ஆற்றும் அளவுக்கு புலமைபெறச் செய்தார்.

14 ஜவுளி ஆலைகள், 19 கல்வி நிலையங்கள், மதுரை வங்கி, மதுரை காப்பீடு நிறுவனம் ஆகியவற்றை நிறுவியவர். கலைத்தந்தை, வள்ளல், தொழில் மேதை என்றெல்லாம் போற்றப்பட்ட கருமுத்து தியாகராஜன் செட்டியார் 81 வயதில் (1974) மறைந்தார்.

## குஜராத்தில் சிறுமியை கடத்திச் சென்று கூட்டுப் பாலியல் வன்கொடுமை செய்த 8 பேர் கைது

**பாட்னா, ஜன.13:**

குஜராத்தின் நவ்சாரி மாவட்டத்தில் வன்ஸ்தா நகரில் கடந்த புதன்கிழமை இரவு 10 மணியளவில், அந்தச் சிறுமி தனது வீட்டின் வெளியே வந்தபோது, மூன்று இளைஞர்கள் அவரை இரு சக்கர ஏற்றி கடத்திச் சென்றனர். கடத்தப்பட்ட சிறுமியை அருகில் உள்ள ஒரு தடுப்பணைக்கு கொண்டு சென்ற அவர்கள், அங்கு காரில் வந்த மேலும் ஐந்து நண்பர்களுடன் சேர்ந்து சிறுமியை மிரட்டி கூட்டுப் பாலியல் வன்கொடுமை செய்தனர். பாதிக்கப்பட்ட சிறுமி வீடு திரும்பி தனது தாயிடம் நடந்ததைக் கூறியுள்ளார். சிறுமியின் தாய் அளித்த புகாரின் பேரில் வன்ஸ்தா போலீசார் வழக்குப்பதிந்து விசாரணை நடத்தினர். பாதிக்கப்பட்ட சிறுமிக்கு மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

காவல்துறையினரின் விசாரணையில், சிறுமியை முதலில் இரு சக்கர வாகனத்தில் கடத்திச் சென்ற மூன்று பேரும் அவரது நண்பர்கள் என்பது தெரியவந்தது.

சிறுமி அடையாளம் காட்டிய மூன்று நண்பர்களை முதலில் பிடித்த போலீசார், அவர்கள் மூலம், தலைமறைவாக இருந்த மற்ற ஐந்து பேரையும் கைது செய்தனர். தற்போது 8 பேரும் போக்சோ வழக்கில் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

## சூரியப் புயலால் புவி காந்தப்புலத்தில் ஏற்படும் தாக்கம்: ஆதித்யா எல்-1 கண்டுபிடிப்புகள் மூலம் புதிய தகவல்

**புதுடெல்லி, ஜன.13:**

இந்தியாவின் முதல் சூரிய விண்கலமான ஆதித்யா எல்-1 விண்கலத்தின் கண்டுபிடிப்புகள் மற்றும் சர்வதேச விண்வெளி மையங்களின் தரவுகளைக் கொண்டு இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

இதுதொடர்பாக இஸ்ரோ சனிக்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பில், 'சூரியனில் ஏற்படும் தற்காலிக மாற்றங்கள் விண்வெளி வானிலை எனப்படுகிறது. சூரிய வளிமண்டலத்தில் இருந்து வெளிவரும் சக்திவாய்ந்த அனல்வீச்சு செயற்கைக்கோள்கள், தொலைத்தொடர்பு மற்றும் வழித்தட சேவைகள், எரிசக்தி உள்கட்டமைப்புகளை கடுமையாகப் பாதிக்கிறது.

சூரியப் புயலின் கொந்தளிப்பான பகுதி புவியின் காந்தப்புலத்தை கடுமையாக சுருக்கி, அதை புவிக்கு அருகில் தள்ளுகிறது. இதனால் புவிசார் சுற்றுப்பாதையில் நிலைகொண்டுள்ள செயற்கைக்கோள்கள் கடும் விண்வெளி வானிலைகளால் பாதிப்புகளை எதிர்கொள்கின்றன. சூரியப் புயலால் உயர் அட்சரேகைப் பகுதிகளில் நீரோட்டங்கள் மிகவும் தீவிரமடைகிறது. இதன் காரணமாக வளிமண்டலத்தின் மேல் பகுதி வெப்பமாகி புவி வாயுக்கள் வெளியேறும் சூழல் ஏற்படுகிறது. விண்வெளி சொத்துகளை பாதுகாக்க விண்வெளி வானிலை மற்றும் சூரியனின் செயல்பாடுகளை மிக கவனமாக கண்காணிக்க வேண்டியதன் அவசியத்தை இந்த ஆய்வு மீண்டும் உறுதிபடுத்தியுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது.

## பல்கலை. தரவரிசையில் முதல் 500 இடங்களில் இந்தியா இல்லை: பிரதமர் மீது குற்றச்சாட்டு




**புதுடெல்லி, ஜன.13:**

உலகளாவிய பல்கலைக் கழகங்களின் கல்வித் தரவரிசை சமீபத்தில் வெளியானது. இந்தத் தரவரிசையில் முதல் 500 பல்கலைக் கழகங்களில் இந்தியா இடம்பெறத் தவறியதாக பிரதமர் மோடி அரசு மீது மூத்த வழக்குரைஞரும் சமூக ஆர்வலருமான பிரசாந்த் பூஷண் குற்றம் சாட்டியுள்ளார். இதுகுறித்து, தனது எக்ஸ் பக்கத்தில் பிரசாந்த் பூஷண், "உலகின் முதல் 500 பல்கலைக் கழகங்களில் இந்தியாவின் ஒரு பல்கலைக் கழகம்கூட இல்லை. விஸ்வகுருவாக வேண்டும் என்ற கூற்றின் உண்மை இதுதான். மோடி ஆட்சியில், உயர் சிந்தனை மற்றும் அறிவியல் அறிவை அழித்த ஆர்எஸ்எஸ் துணைவேந்தர்களால் கட்டாயப்படுத்தியதால்தான், நமது பல்கலைக் கழகங்கள் சீரழிக்கப்பட்டுள்ளன" என்று பதிவிட்டுள்ளார். தரவரிசையில், உலகளாவிய உயர்கல்வியில் 111 பல்கலை.களுடன் அமெரிக்காவே தொடர்ந்து ஆதிக்கம் செலுத்துகிறது. சீனா - 108 பல்கலை., ஐரோப்பிய ஒன்றியம் - 37 பல்கலை. என்றளவிலும் உள்ளன. ஹார்வர்டு பல்கலை. தான் உலகின் முதலிடத்தைத் தக்கவைத்துக் கொண்டது.

## மராட்டியத்தில் சட்டவிரோதமாக தங்கி இருந்த வெளிநாட்டினர் 6 பேர் கைது

**மும்பை, ஜன.13:**

இந்தியாவில் சட்டவிரோதமாக பல்வேறு வெளிநாடுகளை சேர்ந்தவர்கள் தங்கியுள்ளனர். அவர்களை கண்டறிந்து கைது செய்யும் நடவடிக்கையில் மத்திய, மாநில அரசுகள் ஈடுபட்டு வருகின்றன. இந்நிலையில், மராட்டிய மாநிலம் தானே மாவட்டத்தில் வெளிநாட்டினர் சட்டவிரோதமாக தங்கி இருப்பதாக போலீசாருக்கு ரகசிய தகவல் கிடைத்தது. தகவலின் அடிப்படையில் நேற்று முன் தினம் முதல் தானேவின் கார்கர் பகுதியில் போலீசார் தீவிர சோதனை நடத்தினர். சோதனையில் அப்பகுதியில் சட்டவிரோதமாக தங்கி இருந்த 6 வெளிநாட்டினரை போலீசார் கைது செய்தனர். கைது செய்யப்பட்டவர்களில் 5 நைஜீரியாவை சேர்ந்தவர்கள் என்பதும் அவர்கள் அனைவரும் விசா இன்றி தங்கி இருந்ததும் தெரியவந்துள்ளது. இதையடுத்து 6 பேரையும் போலீசார் சிறையில் அடைத்தனர். மேலும், வெளிநாட்டினர் சட்டவிரோதமாக தங்க வீடு வாடகைக்கு கொடுத்த 2 பேரையும் போலீசார் கைது செய்தனர்

## சபரிமலையில் நாளை மகரவிளக்கு பூஜை: திருவாபரண ஊர்வலம் - கட்டுக்கடங்காமல் குவியும் பக்தர்கள்



**திருவனந்தபுரம்,ஜன.13:**

மகரவிளக்கு பூஜையை முன்னிட்டு ஐயப்ப விக்ரகத்தில் திருவாபரணம் அணிவிக்கப்படுவது வழக்கமாகும். இந்த திருவாபரணம் பந்தளத்தில் உள்ள தேவசம் போர்டு பாதுகாப்பு அறையில் வைக்கப்பட்டுள்ளது.

இவ்வருட திருவாபரண ஊர்வலம் (12ம் தேதி) மதியம் 1 மணிக்கு புறப்பட்டது. பந்தளம் மன்னர் குடும்பத்தின் பிரதிநிதியான நாராயண வர்மா தலைமையில் இந்த ஊர்வலம் நடைபெற்றது. நாளை 14ம் தேதி மாலை 6.30 மணியளவில் திருவாபரணம் சன்னிதானத்தை அடையும். பின்னர் இந்த திருவாபரணம் ஐயப்ப விக்ரகத்தில் அணிவிக்கப்பட்டு தீபாராதனை நடைபெறும். இந்த சமயத்தில் தான் பொன்னம்பலமேட்டில் 3 முறை மகரஜோதி தெரியும்.

மகரவிளக்கு பூஜையை யொட்டி சபரிமலையில் பக்தர்கள் வருகை அதிகரித்துள்ளது.

மகரவிளக்கு பூஜை தினத்தன்று சபரிமலையில் நெரிசல் ஏற்படாமல் இருப்பதற்காக 13 மற்றும் 14 ஆகிய தேதிகளில் பக்தர்கள் வருகை கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. 13ம் தேதி 35 ஆயிரம் பேருக்கும், நாளை 14ம் தேதி 30 ஆயிரம் பேருக்கும் மட்டுமே ஆன்லைன் மூலம் தரிசனத்திற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

ஆன்லைனில் முன்பதிவு செய்யாமல் வரும் பக்தர்களுக்கு இந்த நாட்களில் தரிசனத்திற்கு அனுமதி அளிக்கப்பட மாட்டாது என்று போலீஸ் அறிவித்துள்ளது.

மகரவிளக்கு பூஜையை முன்னிட்டு சபரிமலையில் 3 ஆயிரத்திற்கும் மேற்பட்ட போலீசார் குவிக்கப்பட்டுள்ளனர்.

## ஜம்முவில் பாகிஸ்தான் எல்லை அருகே பிடிபட்ட புறா : கால்களில் மோதிரம்.. இறக்கையில் முத்திரை..



**புதுடெல்லி, ஜன.13:**

ஜம்முவின் அக்னூர் செக்டாரில் உள்ள எல்லைக் கட்டுப்பாடு கோடு அருகே கரா என்ற கிராமம் அமைந்துள்ளது.

இங்கு நேற்று, ஆரியன் என்ற 13 வயது சிறுவன், கால்களில் மோதிரங்கள் அணிந்த புறா ஒன்றை பார்த்துள்ளான்.

அதை பிடித்த சிறுவன் தனது குடும்பத்தினருக்கு கூறியுள்ளார். குடும்பத்தினர் பாதுகாப்புப் படையினருக்குத் தகவல் அளித்தனர். சாம்பல் நிறத்திலான அந்தப் புறாவின் இறக்கைகளில் இரண்டு கருப்புப் பட்டைகள் இருந்தன. அதன் கால்களில் சிவப்பு மற்றும் மஞ்சள் நிற மோதிரங்கள் கட்டப்பட்டிருந்தன.

அந்த மோதிரங்களில் 'ரஹ்மத் சர்க்கார்' மற்றும் 'ரிஸ்வான் 2025' என்ற வாசகங்களுடன் சில எண்களும் பொறிக்கப்பட்டிருந்தன.

புறாவின் இறக்கைகளில் ஒரு குறிப்பிட்ட வகை முத்திரை குத்தப்பட்டிருந்தது.

இந்தப் புறா பாகிஸ்தானில் இருந்து உளவு பார்ப்பதற்காக அனுப்பப்பட்டதா அல்லது ஏதேனும் ரகசியச் செய்திகளைத் தாங்கி வந்ததா என்பது குறித்து ஆய்வு நடந்து வருகிறது.

அண்மையில் சம்பா மாவட்ட எல்லையில் பாகிஸ்தான் டிரோன் மூலம் வீசப்பட்ட ஆயுதங்கள் மற்றும் வெடி பொருட்களை பாதுகாப்புப் படையினர் கைப்பற்றியது குறிப்பிடத்தக்கது.

## கருக்கலைப்பு: பெண்ணின் உடல் மீதான உரிமையைப் பறிப்பதாகும்- உயர்நீதிமன்றம்




**புதுடெல்லி, ஜன.13:**

பிரிந்து வாழும் கணவர் ஒருவர், தனது மனைவி தனது அனுமதியின்றி 14 வாரக் கருவைக் கலைத்துவிட்டதாகக் கூறி நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார்.

கருக்கலைப்பு சட்டத்தின் பிரிவு 312-ன் கீழ் அந்தப் பெண் மீது குற்றவியல் நடவடிக்கை எடுக்கக் கோரினார்.

இது தொடர்பாக அந்தப் பெண்ணிற்கு நீதிமன்றம் சம்மன் அனுப்பியது. இந்தச் சம்மனை எதிர்த்து அந்தப் பெண் உயர்நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்தார்.

இதை விசாரித்த நீதிபதி நீனா பன்சால் கிருஷ்ணா, ஒரு பெண் தனது கர்ப்பத்தைத் தொடர விரும்பாதபோது, அவரை அதற்காகக் கட்டாயப்படுத்துவது அவரது உடல் மீதான உரிமையை பறிப்பதாகும்.

இது பெண்ணை மன ரீதியான பாதிக்கும். மற்றவர்களின் உதவியின்றி குழந்தையைத் தனியாக வளர்க்கும் பொறுப்பு பெண்ணின் மீதே விழுகிறது. சட்டபூர்வமாக செய்யும் கருக்கலைப்பு குற்றமாகாது.

எனவே, கருக்கலைப்பு குறித்து முடிவெடுக்கும் முழு உரிமை அந்தப் பெண்ணிற்கே உண்டு" என தெரிவித்து அவர் மீதான குற்றவியல் நடவடிக்கைகளை ரத்து செய்து உத்தரவிட்டார்.

## ஆந்திராவில் சங்கராந்தி பண்டிகையை முன்னிட்டு ரூ.2.5 கோடி பந்தயத்துக்காக தயாரான சண்டை சேவல்கள்



**திருப்பதி, ஜன.13:**

சங்கராந்தி என்றாலே ஆந்திர மாநிலம் கோதாவரி மாவட்டத்தில் சேவல் சண்டை கொண்டாட்டங்கள் உச்சத்தை எட்டும். குறிப்பாக சேவல் சண்டையின் மையமாகஇருக்கும் பீமாவரத்தில், இந்த முறை பண்டிகை உற்சாகம் கடந்த காலத்தை தாண்டியதாக கூறப்படுகிறது. சேவல் சண்டை பந்தயங்களை காண ஆந்திரா, தெலங்கானா, தமிழ்நாடு மற்றும் கர்நாடகாவிலிருந்து ஏராளமான மக்கள் வருவதால், தங்கும் அறைகளுக்கு பெரும் தேவை ஏற்பட்டுள்ளது.

இதனால் பீமாவரம், ஏலூரு, தடேபள்ளிகுடேம் மற்றும் தனுகு போன்ற நகரங்களில் உள்ள சுமார் 150 ஓட்டல்கள் ஹவுஸ் புல்லாக உள்ளது. இதனை கருத்தில்கொண்டு அவற்றின் உரிமையாளர்கள் வாடகையை கடுமையாக உயர்த்தி வருகின்றனர். ஒரு அறை சராசரியாக ரூ.1,000 முதல் ரூ.5,000 வரை இருப்பது வழக்கம். ஆனால் சேவல் சண்டை சீசனுக்காக 3 நாள் தொகுப்புக்கு ரூ.30,000 முதல் ரூ.60,000 வரை அறை வாடகை உயர்த்தப்பட்டுள்ளது.

குறிப்பாக பீமாவரம் பகுதியில் உள்ள சில முக்கிய ஓட்டல்கள் 3 நாட்களுக்கு ஒரு அறைக்கு ரூ.1 லட்சம் என வாடகையை உயர்த்தியுள்ளதாக கூறப்படுகிறது. இந்த முறை, பந்தயத்தில் அதிக அளவில் பணம் கட்டுவது அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. பந்தய நிபுணர்களுடன் ஏற்பாட்டாளர்கள் ஏற்கனவே ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டுள்ளனர்.

தடேபள்ளிகுடேமில் ரூ.2.5 கோடிக்கு மிகப்பெரிய பந்தயத்திற்கு ஏற்பாடு தயாராக உள்ள நிலையில், சீசாலி, நாராயணபுரம் மற்றும் சீனாமிரம் போன்ற இடங்களில் பந்தயத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஆனால் சட்டப்படி சேவல் சண்டை ஏற்பாடு செய்யக்கூடாது என்றாலும் மறுபுறம் கோதாவரி மாவட்டங்களில் சேவல் சண்டை பல கோடி ரூபாய் பந்தயத்துடன் நடத்தப்படுகிறது. அதன்படி பந்தய சேவல்களை போட்டியாளர்கள் பல்வேறு வகைகளில் தயார்படுத்தி வைத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## கிரிக்கெட் வீரர் குறித்து அவதூறு கருத்து: ரூ.100 கோடி கேட்டு நடிகை மீது வழக்கு





**காசிப்பூர், ஜன.13:**

இந்திய கிரிக்கெட் வீரர் சூரியகுமார் யாதவ் தனக்கு குறுஞ்செய்தி அனுப்பியதாக நடிகை குஷி முகர்ஜி கூறிய புகாரால், அவர் மீது ரூ.100 கோடி மதிப்பிலான அவதூறு வழக்கு தொடரப்பட்டுள்ளது. சமூக வலைதளங்களில் பிரபலமான நடிகை குஷி முகர்ஜி என்பவர் சமீபத்தில் வெளியிட்ட கருத்து ஒன்று பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது. அதில், 'நான் கிரிக்கெட் வீரர்களை காதலிக்க விரும்பவில்லை; ஆனால் பல வீரர்கள் என்னை பின்தொடர்கின்றனர்' என்று தெரிவித்திருந்தார். குறிப்பாக இந்திய கிரிக்கெட் அணியின் நட்சத்திர வீரரான சூரியகுமார் யாதவ், தனக்கு கடந்த காலங்களில் அடிக்கடி குறுஞ்செய்தி அனுப்பியதாக அவர் பகிரங்கமாக குற்றம் சாட்டினார்.

திருமணமான ஒரு வீரரின் நற்பெயருக்கு களங்கம் விளைவிக்கும் வகையில் நடிகை வெளியிட்ட இந்தத் தகவல் சமூக வலைதளங்களில் காட்டுத்தீ போல பரவியது. ஆதாரமற்ற இத்தகைய புகார்களைக் கூறி விளம்பரம் தேடுவதாகக் கூறி ரசிகர்கள் பலரும் நடிகைக்கு தங்களது கடும் கண்டனங்களை தெரிவித்து வந்தனர். இந்நிலையில், இந்த விவகாரம் தொடர்பாக சூரியகுமார் யாதவின் சொந்த ஊரான உத்திரப்பிரதேச மாநிலம் காசிப்பூரைச் சேர்ந்த ஃபைசான் அன்சாரி என்பவர் நடிகை குஷி முகர்ஜி மீது சட்டப்பூர்வ நடவடிக்கையை தொடங்கியுள்ளார். தவறான தகவலை பரப்பியதற்காக நடிகை மீது ரூ.100 கோடி நஷ்ட ஈடு கேட்டு அவதூறு வழக்கு தொடரப்பட்டுள்ளது.

## இந்தியா, அமெரிக்காவுக்கு வியக்கத்தக்க வாய்ப்புகள் காத்திருக்கின்றன: சொர்ஜியோ கோர்

**புதுடெல்லி, ஜன.13:**

அமெரிக்க தூதராக நியமிக்கப்பட்ட சொர்ஜியோ கோர்கூறியதாவது:

இந்தியாவுக்கு மீண்டும் வந்தது மகிழ்ச்சியளிக்கிறது. இந்திய தூதராக நியமிக்கப்பட்டது எனது வாழ்நாளில் மிகப் பெரிய கௌரவமாகும். இரு நாடுகளிடையேயான உறவை வலுப்படுத்துவதை எதிர்நோக்கியுள்ளேன். இந்தியா - அமெரிக்கா இரு நாடுகளுக்கும் வியக்கத்தக்க வாய்ப்புகள் காத்திருக்கின்றன என்றார்.

ரஷியாவிடமிருந்து கச்சா எண்ணெய் வாங்கும் நாடுகள் மீது 500 சதவீத வரியை விதிக்க வகை செய்யும் வகையில் அமெரிக்கசெனட்டர் லிண்ட்சே கிரஹாம் அறிமுகம் செய்த மசோதாவுக்கு அதிபர் டிரம்ப் ஒப்புதல் அளித்துள்ள சூழலில், சொர்ஜியோ கோரின் கருத்து குறிப்பிடத்தக்கதாகும். இந்த மசோதா சட்டமானால், இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருள்கள் மீது அமெரிக்கா தற்போது விதித்து வரும் 50 சதவீத வரி, 500 சதவீதமாக உயர்த்தப்படக்கூடும்.

## போதைப்பொருள் வேட்டை; 40 ஏக்கர் 'கசகசா' பயிர் தீவைத்து அழிப்பு

**இம்பால், ஜன.13:**

மணிப்பூர் மாநிலத்தில் போதைப்பொருள் கடத்தல் மற்றும் சட்டவிரோத பயிர் சாகுபடியை அடியோடு ஒழிக்கும் நோக்கில் மாநில அரசு 'போதைப்பொருள் மீதான போர்' என்ற பெயரில் தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இதன் ஒரு பகுதியாக கடந்த வாரம் ஜனவரி 6ம் மற்றும் 7ம் தேதிகளில் காங்போக்பி மலைப்பகுதிகளில் பல்வேறு முகமைகள் இணைந்து நடத்திய சோதனையில் சுமார் 53 ஏக்கர் பரப்பளவிலான கசகசா பயிர்கள் அழிக்கப்பட்டன.

இச்சம்பவம் நடந்து சில நாட்களே ஆன நிலையில் தற்போது மீண்டும் பாதுகாப்புப் படையினர் பெரிய அளவிலான சோதனையை நடத்தியுள்ளனர். இதன் தொடர்ச்சியாக கடந்த 9ம் தேதி அசாம் ரைபிள்ஸ், சிஆர்பிஎப் மற்றும் மணிப்பூர் போலீசார் இணைந்து சேனாபதி மாவட்டத்தில் உள்ள நடன் மலைப்பகுதியில் அதிரடி சோதனையில் ஈடுபட்டனர்.

வனத்துறையினர் உதவியுடன் ட்ரோன் கேமராக்கள் மூலம் கண்காணித்ததில், மிகவும் கரடுமுரடான மற்றும் மறைவான இடங்களில் சட்டவிரோதமாக கசகசா பயிரிடப்பட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

இதையடுத்து சுமார் 40 ஏக்கர் பரப்பளவிலான கசகசா பயிர்களையும், போதைப்பொருளை பதுக்கி வைக்கவும், பதப்படுத்தவும் பயன்படுத்தப்பட்ட 11 குடிசைகளையும் பாதுகாப்புப் படையினர் தீயிட்டு கொளுத்தினர். மேலும் அங்கு கைப்பற்றப்பட்ட உரம், உப்பு, பாசன குழாய்கள் மற்றும் விவசாய உபகரணங்களும் அழிக்கப்பட்டன. அழிக்கப்பட்ட பயிர்களின் மதிப்பு பல கோடி ரூபாய் இருக்கும் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

## கணவன் கொலை வழக்கில் சாட்சியாக இருந்த மனைவி பட்டப்பகலில் சுட்டுக் கொலை..





**புதுடெல்லி ஜன.13:**

டெல்லியின் ஷாலிமார் பாக் பகுதியை சேர்ந்தவர் 44 வயதான ரச்சனா யாதவ். இவர் ஷாலிமார் பாக் நலச் சங்கத்தின் தலைவராகப் பணியாற்றி வந்தார். கடந்த 2023-ம் ஆண்டு, ரச்சனாவின் கணவர் விஜயேந்திர யாதவ், ரச்சனா கண் முன்னாலேயே மர்ம நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார். அந்த வழக்கில் ரச்சனா தான் முக்கிய சாட்சி ஆவார். இந்த வழக்கில் 5 பேர் மீது குற்றவாளிகளாக கண்டறியப்பட்டனர்.இந்நிலையில் நேற்று காலை ஷாலிமார் பாக் பகுதியில், ரச்சனா யாதவ் தனது வீட்டிற்கு அருகில் உள்ள கடைக்குச் சென்றபோது, பைக்கில் வந்த இருவர் ரச்சனாவை நோக்கி துப்பாக்கியால் சுட்டுவிட்டுத் தப்பியோடினர். ரச்சனா மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் வழியிலேயே உயிரிழந்தார். கணவர் கொலை வழக்கில் ரச்சனா சாட்சி சொல்வதைத் தடுப்பதற்காகவே, அந்த வழக்கில் தொடர்புடைய குற்றவாளிகளே இவரையும் கொலை செய்திருக்கலாம் என்று போலீசார் சந்தேகிக்கின்றனர்.

கொலை நடந்த இடத்தில் இருந்த சிசிடிவி காட்சிகளைப் போலீசார் கைப்பற்றியுள்ளனர். அதில் பைக்கில் வந்த இருவர் சுட்டுவிட்டுத் தப்புவது பதிவாகியுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பாக வழக்குப்பதிவு செய்யப்பட்டு விசாரணை நடந்து வருகிறது.




## டிஜிட்டல் அரஸ்ட் மோசடி: டெல்லியில் முதிய தம்பதியிடம் ரூ.14 கோடி பறிப்பு

**புதுடெல்லி, ஜன.13:** தெற்கு டெல்லியிலுள்ள கிரேட்டர் கைலாஷ் பகுதியில் முதிய தம்பதியினர் வசிக்கின்றனர். இருவருமே டாக்டர்கள். அமெரிக்காவில் பணியில் இருந்து ஓய்வு பெற்ற நிலையில் இந்தியா திரும்பியுள்ளனர்.

இவர்கள் சார்பில் டெல்லி சைபர் கிரைம் போலீஸில் ஒரு புகார் தரப்பட்டுள்ளது. அதில் அவர்கள் கூறியுள்ளதாவது: கடந்த ஆண்டு டிசம்பர் 24ம் தேதி செல்போனில் எங்களுக்கு அழைப்பு வந்தது. அதில் பேசிய நபர்கள் போலீஸார் என்றும், எங்களை டிஜிட்டல் அரஸ்ட் செய்துள்ளதாகவும் தெரிவித்தனர். தொடர்ந்து அழைப்பில் இருக்குமாறு, அழைப்பை துண்டித்தால் நேரில் வந்து கைது செய்து விடுவதாகவும் மிரட்டினர். தொடர்ந்து எங்களை வீடியோ காலில் இருக்குமாறு அவர்கள் மிரட்டினர்.

பின்னர் எங்களின் வங்கிக்கணக்கு விவரங்களை தெரிந்து பணத்தை பல்வேறு கணக்குகளுக்கு மாற்றிவிடுமாறு தெரிவித்தனர். ரூ.14 கோடி அளவுக்கு அவர்கள் பணத்தை மாற்றிவிட்டோம். பிறகு தான் அவர்கள் மோசடி செய்தது தெரியவந்தது. கடந்த டிசம்பர் 24-ம் தேதி முதல் ஜனவரி 9-ம் தேதி வரை அவர்கள் எங்களை மிரட்டி வந்தனர். இவ்வாறு அவர்கள் அதில் தெரிவித்துள்ளனர். இதுதொடர்பாக டெல்லி சைபர் கிரைம் பிரிவு போலீஸார் வழக்குப் பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

## ஓய்வுபெற்ற அதிகாரியிடம் ரூ.1.23 கோடி மோசடி: ஆன்லைன் பங்குச்சந்தை முதலீட்டு ஆசைகாட்டி ஏமாற்றியவர் கைது



**சென்னை, ஜன.13:** வில்லிவாக்கத்தைச் சேர்ந்த ஓய்வு பெற்ற மின்வாரிய அதிகாரி மகேந்திரன் (66). இவரை செல்போனில் அழைத்து பேசிய நபர் “ஆன்லைன் பங்குச் சந்தையில் முதலீடு செய்தால் அதிகலாபம் கிடைக்கும். இதற்கு தேவையான உதவிகளை செய்து தருகிறேன்” என ஆசை வார்த்தை கூறியுள்ளார்.

இதை நம்பிய மகேந்திரன் அந்த நபர் அறிவுறுத்திய பங்கில் முதலீடு செய்துள்ளார். அதன்படி அதிக லாபம் கிடைத்துள்ளது. அந்த லாப பணத்தை அவர் எடுக்க முயன்றபோது முடியவில்லை.

இதுகுறித்து கேட்டபோது, மேலும் பணத்தை முதலீடு செய்ய அறிவுறுத்தியுள்ளனர். இதையடுத்து மகேந்திரன் பல்வேறு தவணைகளாக அவர்கள் குறிப்பிட்ட வங்கிக் கணக்குகளில் ரூ.1.23 கோடி செலுத்தியுள்ளார். ஆனால் அவர் செய்த முதலீடு, அதற்கான லாபம் எதுவும் கிடைக்கவில்லை.

தான் ஏமாற்றப்பட்டதை உணர்ந்த மகேந்திரன், அளித்த புகாரின்பேரில் சைபர் க்ரைம் போலீஸார் வழக்குப் பதிந்து விசாரித்தனர். இதில் பண மோசடியில் ஈடுபட்டது ஈரோடு மூலப்பாளையத்தைச் சேர்ந்த செந்தில் குமார் (41) என்பது தெரியவந்தது.

இவர் அங்குள்ள தனியார் நிறுவனம் ஒன்றில் மேலாளராகவும் பணி செய்து வந்துள்ளார். இதையடுத்து அவரை போலீஸார் கைது செய்து விசாரிக்கின்றனர்.

## பொங்கல் பரிசு வாங்க சென்ற மூதாட்டி மயங்கி விழுந்து உயிரிழப்பு

**கோவை, ஜன.13:** பொங்கல் பண்டிகை வருகிற 15-ம் தேதி கொண்டாடப்படுகிறது. இதையொட்டி தமிழக அரசு சார்பில் ரூ.3,000 ரொக்கப் பணத்துடன் பொங்கல் பரிசு தொகுப்பு தமிழகம் முழுவதும் வழங்கப்பட்டு வருகிறது.

இந்த நிலையில், கோவை மாவட்டம் பேரூர் அருகே உள்ள வேடபட்டி சத்யா நகரைச் சேர்ந்தவர் வீரம்மாள் (வயது 87). இவரது கணவர் உயிரிழந்து விட்டார். இதனால் அவர் கஸ்தூரிநாயக்கன்பாளையத்தில் உள்ள வீட்டில் தங்கியிருந்து வேலை செய்து வந்தார்.

பொங்கல் பரிசு தொகுப்பு வாங்குவதற்காக வீரம்மாள் ஆட்டோ மூலம் நாகராஜபுரம் பஸ் நிறுத்தம் பகுதிக்கு வந்தார். அங்கிருந்து ரேஷன் கடைக்கு நடந்து சென்று கொண்டிருந்தார். திடீரென அவர் சாலையோரத்தில் மயங்கி விழுந்தார். உடனே அக்கம்பக்கத்தினர் அவரை மீட்டு அருகில் உள்ள மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். அங்கு அவரை பரிசோதித்த டாக்டர்கள் அவர் ஏற்கனவே இறந்து விட்டதாக தெரிவித்தனர்.

இதுகுறித்து தொண்டாமுத்தூர் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த சம்பவம் அந்த பகுதியில் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

## போலீஸ் எனக்கூறி ரியல் எஸ்டேட் அதிபரிடம் பணம் பறிக்க முயற்சி – 4 பேர் கைது



**கிருஷ்ணகிரி, ஜன.13:** கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூரில் உள்ள காமன்தொட்டி கிராமத்தில் ரியல் எஸ்டேட் தொழில் செய்து வரும் பிரவீன்குமார் என்பவர் அவரது அலுவலகத்திற்கு 4 நபர்கள் வந்துள்ளனர். அவர்கள் வந்த காரில் போலீஸ் என எழுதப்பட்டிருந்தது.

அவர்கள் பிரவீன்குமாரிடம், பணமோசடி வழக்கில் அவரது பெயர் சம்பந்தப்பட்டிருப்பதாகவும், அவர் மீது வழக்குப்பதிவு செய்து கைது செய்யப்போவதாகவும் கூறியுள்ளனர். இதனால் பிரவீன்குமார் செய்வதறியாது திகைத்துள்ளார். தனக்கு பணமோசடி வழக்கில் எந்த தொடர்பும் இல்லை என்று அவர் கூறியுள்ளார்.

இதையடுத்து, அந்த நபர்கள் பிரவீன்குமாரை தங்கள் காரில் அழைத்துச் சென்றனர். அப்போது, இந்த வழக்கில் இருந்து விடுவிக்க வேண்டும் என்றால் 30 லட்சம் ரூபாய் பணம் தர வேண்டும் என்று அவர்கள் கேட்டுள்ளனர். இதனால் சந்தேகமடைந்த பிரவீன்குமார், அவர்களிடம் பணத்தை எடுத்து வருவதாக கூறி தப்பி ஓடி வந்தார்.

பின்னர் உடனடியாக இது குறித்து காவல்நிலையத்தில் அவர் புகார் அளித்தார். அவர் அளித்த புகாரின் அடிப்படையில் விசாரணை நடத்திய காவல்துறையினர், போலீஸ் வேஷம் போட்டு பணம்பறிக்க முயன்ற மல்லேஷ் உள்ளிட்ட 4 பேரை கைது செய்தனர். கைது செய்யப்பட்டவர்களுக்கு கடத்தல் உள்ளிட்ட பல்வேறு வழக்குகளில் தொடர்பு இருப்பதாக போலீசார் தெரிவித்துள்ளனர். இது தொடர்பாக தீவிர விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.

## பாலமேடு, அலங்காநல்லூரில் ஜல்லிக்கட்டு போட்டிக்கான ஏற்பாடுகள் விறுவிறுப்பு



**மதுரை, ஜன.13:** ஆண்டுதோறும் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு பாலமேடு, அலங்காநல்லூரில் உலகப்புகழ் ஜல்லிக்கட்டு போட்டிகள் நடைபெறுவது வழக்கம். அதன்படி இந்த ஆண்டு பொங்கல் பண்டிகையையொட்டி, பாலமேட்டில் வருகிற 16-ந் தேதியும், அலங்காநல்லூரில் 17-ந் தேதியும் ஜல்லிக்கட்டு போட்டிகள் நடைபெற உள்ளது.

இதற்காக பாலமேட்டில் உள்ள மஞ்ச மலை சுவாமி ஆற்று திடலில் தயார் நிலையில் வாடிவாசல், பார்வையாளர் மாடம் மற்றும் இரண்டு அடுக்கு பாதுகாப்பு வேலிகள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் பல்வேறு பாதுகாப்பு முன்னேற்பாடு பணிகள் விறுவிறுப்பாக நடந்து வருகின்றன.

இதே போல் அலங்காநல்லூரிலும் ஜல்லிக்கட்டு போட்டியை முன்னிட்டு முன்னேற்பாடு பணிகள் தீவிரமாக நடந்து வருகிறது.

அதன்படி கோட்டைமுனி சாமி திடல், வாடிவாசல், பார்வையாளர்கள் அமரும் இரும்பு தடுப்பு மேடை, வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் அமரும் இடம் மற்றும் இரண்டு அடுக்கு பாதுகாப்பு வேலிகள் அமைக்கப்பட்டு வருகிறது.

இந்த பணிகள் அனைத்தும் முழுவீச்சில் நடந்து வருகிறது. பாலமேட்டில் நடைபெறும் ஜல்லிக்கட்டு போட்டியில் தமிழக துணை முதல்-அமைச்சர் உதயநிதி ஸ்டாலினும், அலங்காநல்லூரில் நடைபெறும் ஜல்லிக்கட்டு போட்டியில் முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலினும் கலந்து கொண்டு போட்டியை தொடங்கி வைக்கிறார்கள். இதை முன்னிட்டு போலீசாரும் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகளை தீவிரமாக செய்து வருகின்றனர்.

## குப்பையில் கிடந்த 45 பவுன் நகைகளை போலீஸில் ஒப்படைத்த தூய்மைப் பணியாளர்

### குற்றவாளியைப் போல் விசாரித்த போலீஸார்





**சென்னை, ஜன.13:** குப்பையோடு குப்பையாக கிடந்த 45 பவுன் தங்க நகைகளை, காவல் நிலையத்தில் ஒப்படைத்த தூய்மைப் பணியாளரை போலீஸார் குற்றவாளியைப் போல விசாரித்த சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

திருவல்லிக்கேணி, கிருஷ்ணாம்பேட்டை பகுதியைச் சேர்ந்தவர் பத்மா(50). இவர் சென்னை மாநகராட்சியில் ஒப்பந்தப் பணியாளராக பணி செய்து வருகிறார். இவர் நேற்று தி.நகரில் உள்ள மகாராஜா சந்தானம் தெருவில் தூய்மைப் பணியில் ஈடுபட்டிருந்தார்.

அப்போது அங்கு குப்பையோடு குப்பையாக கிடந்த கவர் ஒன்றை எடுத்து பார்த்தபோது, ஐஸ்கிரீம் டப்பாவுக்குள் 45 பவுன் தங்க நகை இருப்பது தெரிந்தது. உடனே அதை அவரது மேற்பார்வையாளரிடம் பத்மா ஒப்படைத்தார்.

அவர் நகைகளை பாண்டிபஜார் காவல் நிலையத்தில் ஒப்படைத்துள்ளார். இதையடுத்து சட்டம்-ஒழுங்கு போலீஸார் பத்மாவை அழைத்து அவரிடம் விசாரித்தனர்.

ஒரு மணி நேர விசாரணைக்கு பிறகு அக்காவல் நிலைய குற்றப் பிரிவு காவல் ஆய்வாளரிடம் பத்மா ஒப்படைக்கப்பட்டார். அவர் பத்மாவிடம் விசாரணை நடத்தியுள்ளார். இப்படி மதியம் 3.30 முதல் இரவு 7.30 மணிக்கு பிறகும் விசாரணை தொடர்ந்துள்ளது.

இதை அறிந்து தூய்மைப் பணி மேற்பார்வையாளர் தலைமையிலானவர்கள் திரண்டு, “குப்பையில் கிடந்த நகைகளை காவல் நிலையத்தில் ஒப்படைத்த பணியாளரை ஏன் இப்படி சிறை வைத்து விசாரிக்கிறீர்கள். அவர் என்ன குற்றம் செய்தார்.

கேட்பாரற்று கிடந்த நகையை போலீஸில் ஒப்படைத்தது குற்றமா? சென்னை காவல் ஆணையர் அலுவலகத்தில் ஒப்படைக்கலாம் என சக பணியாளர்கள் தெரிவித்தனர். ஆனால், சம்பந்தப்பட்ட எல்லைக்கு உட்பட்ட காவல் நிலையத்தில்தான் ஒப்படைக்க வேண்டும் எனக் கருதி பாண்டிபஜார் காவல் நிலையத்தில் ஒப்படைத்தோம்.

ஆனால் போலீஸார், நகையை நேர்மையாக ஒப்படைத்த எங்களது பணியாளரை குற்றவாளி போல் நடத்துகின்றனர்” என வருத்தத்துடன் தெரிவித்தனர். சாலையோரம் கண்டெடுக்கப்பட்ட நகைகளின் மதிப்பு ரூ.45 லட்சம் என்பது குறிப்பிடத்தக்கது.

## மணிமுத்தாறு அருவியில் குறையாத வெள்ளப்பெருக்கு: இரண்டாவது நாளாக குளிக்கத் தடை



**நெல்லை, ஜன.13:** மன்னார் வளைகுடா பகுதியில் நிலவிய ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி காரணமாக தமிழகத்தில் மழை பெய்யும் என வானிலை ஆய்வு மையம் அறிவித்து இருந்தது. அதன்படி நெல்லை, தென்காசி, தேனி உள்ளிட்ட தென் மாவட்டங்களில் நேற்று முன் தினம் இரவு முழுவதும் தொடர் மழை பெய்தது. குறிப்பாக நெல்லையில் இரவு முழுவதும் மிதமான மழை பெய்தது.

இதன் காரணமாக, மணிமுத்தாறு அருவியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. இதனால் பாதுகாப்பு கருதி அருவியில் குளிக்க சுற்றுலா பயணிகளுக்கு வனத்துறையினர் நேற்று தடை விதித்திருந்தனர். இந்த நிலையில், மணிமுத்தாறு அருவியில் இன்றும் வெள்ளப்பெருக்கு குறையாத நிலையில் இரண்டாவது நாளாக அருவியில் குளிப்பதற்கு தடை நீட்டிக்கப்பட்டுள்ளது.

இதனால், காலையில், மணிமுத்தாரு அருவிக்கு குளிக்க வந்திருந்த சுற்றுலா பயணிகள் மற்றும் அய்யப்ப பக்தர்கள், இந்த அறிவிப்பால் ஏமாற்றத்துடன் திரும்பிச்சென்றனர்.

நீர்வரத்தை அதிகாரிகள் தொடர்ந்து கண்காணித்து வருகின்றனர்.

## மெரினாவில் இரவில் அணிவகுத்து சென்ற பைக்குகள்: 600 இருசக்கர வாகனங்களில் சாலை பாதுகாப்பு பேரணி



**சென்னை, ஜன.13:** சாலை பாதுகாப்பு விழிப்புணர்வின் ஒரு பகுதியாக, 600 பைக்குகள் மெரினாவில் அணிவகுத்து சென்றன. இந்த மாதம் ஜனவரி 1 முதல் 31-ம் தேதி வரை சாலை பாதுகாப்பு மாதம் கடைபிடிக்கப்படுகிறது.

இதையடுத்து இந்த ஜனவரி முழுவதும் பல்வேறு சாலை பாதுகாப்பு மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் நடத்தப்பட்டு வருகின்றன.

மேலும் பொதுமக்கள், தனியார் நிறுவனங்கள் மற்றும் அரசு நிறுவனங்களிடையே சாலை பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் பல்வேறு சாலை பாதுகாப்பு சார்ந்த நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றன.

நேப்பியர் பாலத்தில் நிறைவு

இதன் ஒரு பகுதியாக சென்னை பெருநகர போக்குவரத்து காவல் துறை சார்பில் நேற்று முன்தினம் இரவு ‘சூப்பர் பைக் பேரணி’ மெரினா காமராஜர் சாலையில் நடைபெற்றது. இதை சென்னை போக்குவரத்து காவல் கூடுதல் ஆணையர் கார்த்திகேயன் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

இந்த பேரணியில் 600-க்கும் மேற்பட்ட தன்னார்வலர்கள் மற்றும் போக்குவரத்து காவல் துறையினர் பாதுகாப்பு அம்சங்களுடன் பங்கேற்றனர். இந்த பேரணியானது அண்ணா சதுக்கம் பேருந்து நிலையத்தில் தொடங்கி காமராஜர் சாலை உழைப்பாளர் சிலை, காந்தி சிலை, ஆர்.கே.சாலை, அண்ணா ரோட்டரி, பெரியார் சிலை, கொடி மரச்சாலை வழியாக சென்று நேப்பியர் பாலத்தில் முடிவடைந்தது.

இந்நிகழ்ச்சியில் போக்குவரத்து காவல் இணை ஆணையர் விஜயகுமார், துணை ஆணையர்கள் மேகலினா ஐடன், குமார், ஜெயகரண் (ஆயுதப்படை) உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## எம்ஜிஆர் பிறந்தநாள்: ஜன. 18, 19 தேதிகளில் தமிழகம் முழுவதும் பொதுக்கூட்டங்கள் - அதிமுக அறிவிப்பு



**சென்னை, ஜன.13:** அதிமுக நிறுவனத் தலைவர் எம்ஜிஆரின் 109-வது பிறந்த நாளை முன்னிட்டு வரும் 18, 19 ஆகிய தேதிகளில் பொதுக்கூட்டங்கள் நடைபெற இருப்பதாக அக்கட்சியின் பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், “அதிமுக நிறுவனத் தலைவர் எம்ஜிஆரின் 109-வது பிறந்த நாள் விழாவை முன்னிட்டு வரும் 18, 19 ஆகிய தேதிகளில் பொதுக்கூட்டங்கள் நடைபெற உள்ளன. கழக அமைப்பு ரீதியாக செயல்பட்டு வரும் 82 மாவட்டங்களிலும்; கழக அமைப்புகள் செயல்பட்டுக் கொண்டிருக்கும் புதுச்சேரி, ஆந்திரா, கேரளா உள்ளிட்ட பிற மாநிலங்களிலும் பொதுக்கூட்டங்கள் நடைபெற உள்ளன.

கழக சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள், தாங்கள் சார்ந்த மாவட்டத்தில் நடைபெற உள்ள பொதுக்கூட்டங்களில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்” இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

பொதுக்கூட்டங்கள் நடைபெற உள்ள இடங்கள்; அவற்றில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றுவோர் விபரங்கள் அடங்கிய பட்டியலை அதிமுக வெளியிட்டுள்ளது. அதன்படி, வரும் 18ம் தேதி ஞாயிற்றுக்கிழமை அன்று தென் சென்னையில் நடைபெறும் பொதுக்கூட்டத்தில் எடப்பாடி பழனிசாமி உரையாற்ற உள்ளார்.

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டத்தில் கே.பி. முனுசாமியும், திண்டுக்கல் மேற்கு மாவட்டத்தில் திண்டுக்கல் சீனிவாசனும், கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டத்தில் மு. தம்பிதுரையும், கோவை புறநகர் தெற்கு மாவட்டத்தில் எஸ். பி. வேலுமணியும் உரையாற்ற உள்ளனர்.

இதேபோல், வரும் 19ம் தேதி திண்டுக்கல் கிழக்கு மாவட்டத்தில் நத்தம் விஸ்வநாதனும், திருவள்ளூர் கிழக்கு மாவட்டத்தில் சி. பொன்னையனும், நாமக்கல் மாவட்டத்தில் பி. தங்கமணியும், திருப்பூர் மாநகர் மாவட்டத்தில் பொள்ளாச்சி ஜெயராமனும், வட சென்னை கிழக்கு மாவட்டத்தில் டி. ஜெயக்குமாரும், விழுப்புரம் மாவட்டத்தில் சி.வி. சண்முகமும் உரையாற்ற உள்ளனர்.

## சென்னை உள்ளிட்ட வட மாவட்டங்களில் கடும் குளிரால் மக்கள் பாதிப்பு



**சென்னை, ஜன.13:** சென்னை உள்ளிட்ட வட மாவட்டங்களில் நிலவும் கடும் குளிரால் மக்கள் பாதிப்புக்கு உள்ளாகினர். இயல்புக்கு மாறான வானிலை காரணமாக கடும் குளிர் நிலவுவதாக இந்திய வானிலை ஆய்வு மையத்தின் தென் மண்டல தலைவர் பி.அமுதா தெரிவித்துள்ளார்.

கடந்த சில தினங்களாக சென்னை, வேலூர், திருப்பத்தூர் உள்ளிட்ட வட மாவட்டங்களில் கடும் குளிர் நிலவி வருகிறது. பொதுமக்கள் ஸ்வெட்டர், மஃப்ளர் சகிதமாக காலை, மாலை வேளைகளில் வலம் வருகின்றனர்.

விடுமுறை தினத்தில்கூட குழந்தைகள் அதிகம் வெளியில் விளையாடுவதை பார்க்க முடியவில்லை. இருசக்கர வானங்களில் செல்லும்போது, குளிர் நடுங்கச் செய்கிறது. சென்னை, புறநகர் பகுதிகள் ஊட்டி, கொடைக்கானல் போன்று மாறியது. மெரினா கடற்கரைக்கு மாலை நேரங்களில் ஸ்வெட்டர் அணிந்து தான் மக்கள் வருகின்றனர். வீடுகளில் தரை ஐஸ் கட்டி போல ஜில் என இருக்கிறது. இந்த கடும் குளிரால் இருமல், காய்ச்சல் உள்ளிட்ட பாதிப்புகளும் ஏற்படுகின்றன.

இதுபோன்ற கடும் குளிர் நிலவுவதற்கான காரணம் குறித்து இந்திய வானிலை ஆய்வு மையத்தின் தென் மண்டல தலைவர் பி.அமுதா கூறியதாவது: கடந்த 1891 முதல் 2026 வரை ஜனவரி மாதத்தில் 21 முறை தான் காற்றழுத்த தாழ்வு மண்டலங்கள் உருவாகியுள்ளன. இந்த ஆண்டு ஜனவரியில் இலங்கை அருகே காற்றழுத்த தாழ்வு மண்டலம் வலுப்பெற்றது. இது வளிமண்டல கீழடுக்கு சுழற்சியாக மன்னார் வளைகுடா அருகே நீடித்து வருகிறது. ஏற்கெனவே வட மாநிலங்களில் குளிர் அலையின் தாக்கம் உள்ளது.

மேலும், வளிமண்டல மேலடுக்குகளில் காற்றழுத்த தாழ்வு மண்டலத்தின் தாக்கம் காரணமாக, வட மாநிலத்தில் நிலவும் குளிர் காற்று ஈர்க்கப்பட்டு வட தமிழகம் நோக்கி வருகிறது. தெற்கு திசையில் இருந்தும் குளிர் காற்று வட தமிழகம் நோக்கி வருகிறது. கடந்த 4 நாட்களுக்கு மேலாக சூரிய ஒளியே வராத நிலையில், நிலத்திலிருந்து வெளியேறும் வெப்பம் தடைபட்டு, பூமியும் குளிர்ச்சி அடைந்துள்ளது.

ரஷ்யா வழியாக சைபீரிய குளிர் அலையின் தாக்கமும் தமிழகம் நோக்கி வருகிறது. இது போன்ற பல்வேறு காரணங்களால் சென்னை உள்ளிட்ட வட தமிழக பகுதிகளில் குளிர் அதிகரித்துள்ளது. இது இயல்புக்கு மாறான வானிலையால் தான் ஏற்பட்டுள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

# கரூர் தோட்டக்குறிச்சி மலையம்மன் கோவிலில் அம்மனுக்கு பாலாபிஷேகம்



**கரூர், ஜன.13:** கரூர் மாவட்டம் தோட்டக்குறிச்சியில் உள்ள மலையம்மன் கோவிலில் அம்மனுக்கு பாலாபிஷேகம் நடைபெற்றது.

பாலாபிஷேகத்தை முன்னிட்டு சுற்றுவட்டார பகுதிகளைச் சேர்ந்த ஏராளமான பக்தர்கள் காவிரி ஆற்றுக்கு சென்று புனித நீராடி தீர்த்தக் குடங்களுடன் மேள தாளங்கள் முழங்க ஊர்வலமாக கோவிலை வந்தடைந்தனர்.

அதனைத் தொடர்ந்து ஏராளமான பெண்கள் ஊர்வலமாக கொண்டு வந்த பால் குடங்களில் இருந்த பாலால் அம்மனுக்கு அபிஷேகம் செய்தனர். அதனைத் தொடர்ந்து பல்வேறு வாசனை திரவியங்களால் சிறப்பு அபிஷேகமும், பல்வேறு மலர்களால் அலங்காரமும் செய்யப்பட்டது. அதனைத் தொடர்ந்து தீபாராதனை காட்டப்பட்டது.

இதில் தோட்டக்குறிச்சி, தளவாபாளையம் சுற்றுவட்டார பகுதிகளை சேர்ந்த ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு மலையம்மனை தரிசனம் செய்தனர். பக்தர்களுக்கு பிரசாதம் மற்றும் அன்னதானம் வழங்கப்பட்டது.

# மதுரைக்கு ரூ.4,000; நெல்லைக்கு ரூ.4,500 : ஆம்னி பேருந்துகளின் கட்டணக் கொள்ளை

## அன்புமணி கண்டனம்



**சென்னை, ஜன.13:** பா.ம.க. தலைவர் அன்புமணி வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில் தெரிவித்திருப்பதாவது;-

பொங்கல் திருநாளைக் கொண்டாடுவதற்காக லட்சக்கணக்கான மக்கள் சென்னையிலிருந்து சொந்த ஊர்களுக்கு செல்லத் திட்டமிட்டிருக்கும் நிலையில், இதைப் பயன்படுத்திக் கொண்டு தனியார் ஆம்னி பேருந்து நிறுவனங்கள் விண்ணை முட்டும் அளவுக்கு கட்டணத்தை உயர்த்தியுள்ளன. அரசின் விதிகளை மீறி அப்பட்டமாக கட்டணக் கொள்ளை நடைபெறும் நிலையில், அதைத் தடுக்க திமுக அரசு எந்த நடவடிக்கையும் எடுக்காதது கண்டிக்கத்தக்கது.

சென்னையிலிருந்து நாளை 13-ஆம் தேதியும், நாளை மறுநாள் 14-ஆம் தேதியும் மதுரை செல்வதற்கு ரூ.4,000 வரையிலும், நெல்லை செல்ல ரூ.4,500 வரையிலும், கோவைக்கு ரூ.3,800 வரையிலும் கட்டணமாக வசூலிக்கப்படும் என்று ஆம்னி பேருந்துகள் அறிவித்துள்ளது.

இந்தக் கட்டணம் விவரங்கள் ஆன்லைன் முன்பதிவு இணைய தளங்களில் வெளியிடப்பட்டு முன்பதிவுகள் செய்யப்பட்டு வருகின்றன. அனைத்து ஊடகங்களிலும் இந்தக்கட்டணக் கொள்ளை தொடர்பாக செய்திகள் வெளியிடப்பட்டுள்ளன. ஆனாலும் ஆம்னி பேருந்துகளின் கட்டணக் கொள்ளையை தடுக்காமல் திமுக அரசு வேடிக்கைப் பார்த்து வருகிறது.

ஆம்னி பேருந்துகளின் கட்டணக் கொள்ளையைக் கட்டுப்படுத்த வேண்டும் என்று தமிழக அரசுக்கு சென்னை உயர்நீதிமன்றம் பல முறை ஆணையிட்டிருக்கிறது. ஆம்னி பேருந்துகளின் கட்டணக் கொள்ளையை பாட்டாளி மக்கள் கட்சி ஒவ்வொரு முறையும் அம்பலப்படுத்தி வருகிறது. அப்போதெல்லாம் ஆம்னி பேருந்துகளின் உரிமையாளர்களிடம் பேச்சு நடத்தி ரூ.100 அல்லது ரூ.200 கட்டணக் குறைப்பு செய்ய வைப்பது, அதையும் மீறி கட்டணக் கொள்ளையில் ஈடுபடும் பேருந்துகளுக்கு ரூ.2000 அபராதம் விதிப்பது போன்ற ஏமாற்று வேலைகளை மட்டுமே திமுக அரசு செய்து வருகிறது.

ஒரு மக்கள்நல அரசின் கடமை மக்களின் பக்கம் நிற்பது தான். திமுக அரசு மக்களின் பக்கம் நிற்கிறது என்றால், சட்டவிரோதமாக கட்டணக் கொள்ளையில் ஈடுபடும் ஆம்னி பேருந்து நிறுவனங்கள் மீது கடுமையான நடவடிக்கைகளைமேற்கொண்டு அவற்றின் கட்டணங்களைக் குறைக்கச் செய்திருக்க வேண்டும். ஆனால், கடந்த ஐந்தாண்டுகளில் ஒருமுறை கூட திமுக அரசு அவ்வாறு செய்யவில்லை. மாறாக கட்டணக் கொள்ளையில் ஈடுபடும் ஆம்னி பேருந்து நிறுவனங்களின் பக்கம் நின்று அவை மக்களை சுரண்டுவதற்கு துணை போவதையே திமுக அரசு வாடிக்கையாக வைத்திருக்கிறது.

தமிழ்நாட்டை ஆளும் திமுக அரசு மக்களுக்கு சேவை செய்வதை விடுத்து, தனியார் முதலாளிகளுக்கு ஏவல் செய்வதையே கடமையாக வைத்திருக்கிறது என்ற குற்றச்சாட்டு தொடர்ந்து எழுப்பப்பட்டு வருகிறது. ஆம்னி பேருந்துகளின் கட்டணக் கொள்ளையை திமுக அரசு தடுக்கத் தவறியதன் மூலம் மீண்டும் ஒருமுறை அந்தக் குற்றச்சாட்டு உறுதி செய்யப்பட்டுள்ளது. திமுக ஆட்சியாளர்களுக்கு மனசாட்சி இருந்தால் பொதுமக்கள் எளிதாக சொந்த ஊர் சென்று திரும்புவதற்கு வசதியாக ஆம்னி பேருந்துகளின் கட்டணங்களைக் குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சென்னை கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவமனைக்குள் ரவுடி வெட்டிக்கொலை

**சென்னை, ஜன.13:** சென்னை கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவமனைக்குள் ரவுடி வெட்டிக்கொல்லப்பட்ட சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

அரசு மருத்துவமனையில் பிரசவ வார்டில் அனுமதிக்கப்பட்டிருந்த தோழியை காண்பதற்காக வந்த ரவுடி ஆதி வெட்டி படுகொலை செய்யப்பட்டார். தலை, கை, கால் உள்ளிட்ட பல பகுதிகளில் பலத்த வெட்டுக்காயம் ஏற்பட்டு ஆதி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

ரவுடி ஆதியை வெட்டிக்கொன்றது தோழி சுசித்ராவின் உறவினர்கள் மூன்று பேர் என்பது போலீசாரின் விசாரணையில் தெரியவந்துள்ளது.

தலைமறைவான சுசித்ராவின் உறவினர்களாக சூர்யா, அலிபாய் மற்றும் கார்த்திக் ஆகியோரை போலீசார் தேடி வருகின்றனர்.

# போரூர் - வடபழனி இடையேயான மெட்ரோ ரெயிலின் முதற்கட்ட சோதனை வெற்றி - வீடியோ வெளியிட்ட CMRL



**சென்னை, ஜன.13:** சென்னையின் இரண்டாம் கட்ட மெட்ரோ ரயில் திட்டத்தில் ஒரு முக்கிய மைல்கல்லாக கருதப்படும், போரூர் - வடபழனி வரையிலான 7 கி.மீ., வழித்தடத்தில் நேற்று நடைபெற்ற முதற்கட்ட சோதனை ஓட்டம் வெற்றிகரமாக நிறைவடைந்தது.

பூந்தமல்லி- போரூர் வரையிலான 10 கி.மீ தூரத்திற்கு சோதனை ஓட்டம் நிறைவடைந்த நிலையில் போரூர்- வடபழனி இடையே சோதனை ஓட்டம் நடைபெற்றது .

பூந்தமல்லி - வடபழனி இடையே பிப்ரவரி 2வது வாரத்தில் ரெயில் சேவையைத் தொடங்க மெட்ரோ நிர்வாகம் திட்டமிட்டு வருகிறது.

இந்நிலையில், போரூர் - வடபழனி வழித்தடத்தில் நேற்று நடைபெற்ற முதற்கட்ட சோதனை ஓட்டம் தொடர்பான வீடியோவை சென்னை மெட்ரோ நிர்வாகம் தனது எக்ஸ் பக்கத்தில் வெளியிட்டுள்ளது.

இது சென்னையின் முதல் இரட்டை அடுக்கு மெட்ரோ மேம்பால வழித்தடமாகும். இதில் கீழ் அடுக்கில் வாகனங்களும், மேல் அடுக்கில் மெட்ரோ ரயில்களும் செல்லும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்த வழித்தடம் செயல்பாட்டிற்கு வரும்போது, ஆற்காடு சாலையில் ஏற்படும் போக்குவரத்து நெரிசல் பெருமளவு குறையும். குறிப்பாக பூந்தமல்லி மற்றும் போரூர் பகுதியிலிருந்து வடபழனி வழியாக நகரின் மையப்பகுதிகளுக்குச் செல்பவர்களுக்கு இது மிகப்பெரிய வரப்பிரசாதமாகக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# மேட்டூர் அணையில் இருந்து தண்ணீர் திறப்பு குறைப்பு



**மேட்டூர், ஜன.13:** மேட்டூர் அணையில் இருந்து காவிரி டெல்டா பாசனத்துக்கு கடந்த 7-ந் தேதி முதல் வினாடிக்கு 6 ஆயிரம் கனஅடி வீதம் தண்ணீர் திறந்து விடப்பட்டது. இந்த நிலையில் பாசனப்பகுதிகளில் தண்ணீர் தேவை குறைந்துள்ளது. இதனை கருத்தில் கொண்டு நேற்று காலை முதல் அணையில் இருந்து காவிரி டெல்டா பாசனத்துக்கு திறக்கப்படும் தண்ணீரின் அளவானது வினாடிக்கு 4 ஆயிரம் கனஅடியாக குறைக்கப்பட்டு உள்ளது.

கால்வாய் பாசன தேவைக்காக தொடர்ந்து வினாடிக்கு 400 கனஅடி வீதம் தண்ணீர் திறந்து விடப்பட்டு வருகிறது. அணைக்கு நீர்வரத்து வினாடிக்கு 142 கனஅடியாக இருந்தது. அதே நேரத்தில் நேற்று முன்தினம் 98.48 அடியாக இருந்த நீர்மட்டம் நேற்று 98.04 அடியாக குறைந்தது. தண்ணீர் திறப்பை விட நீர்வரத்து குறைவாகவே இருப்பதால் அணையின் நீர்மட்டம் படிப்படியாக குறைந்து வருவது குறிப்பிடத்தக்கது.

# ஆண்டாள் கோயிலில் ஓ.பன்னீர்செல்வம் சுவாமி தரிசனம்



**ஸ்ரீவில்லிபுத்தூர், ஜன.13:** ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள் கோயிலில் முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் திங்கள் கிழமை (இன்று) சுவாமி தரிசனம் செய்தார். அவரிடம் செய்தியாளர்கள் பேட்டி கேட்டதற்கு தை பிறக்கட்டும், என தெரிவித்து விட்டு, கோயிலுக்குள் சென்றார்.

முன்னாள் முதல்வரும், அதிமுக தொண்டர்கள் உரிமை மீட்பு குழுவின் ஒருங்கிணைப்பாளருமான ஓ.பன்னீர் செல்வத்தின் குலதெய்வம் கோயில் ஸ்ரீவில்லிபுத்தூர் மேற்குத் தொடர்ச்சி மலை அடிவாரத்தில் உள்ளது. தேர்தலில் வேட்பு மனு தாக்கல் செய்யும் போதும், முக்கிய முடிவுகள் எடுப்பதற்கு முன்பும் குலதெய்வம் கோயில் மற்றும் ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள் கோயிலில் பன்னீர்செல்வம் வழிபாடு நடத்துவது வழக்கம்.

ஓ.பன்னீர்செல்வம் தலைமையிலான அதிமுக தொண்டர்கள் உரிமை மீட்புக்குழு, தேசிய ஜனநாயக கூட்டணியில் இருந்து விலகிய நிலையில், 2026 சட்டப்பேரவை தேர்தலில் எந்த கூட்டணியில் இடம் பெறும் என்பது கேள்விக்குறியாக உள்ளது. இந்நிலையில் திங்கள் கிழமை காலை (இன்று) ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள் கோவிலில் ஓ.பன்னீர்செல்வம் சுவாமி தரிசனம் செய்தார்.

அப்போது செய்தியாளர்கள் பேட்டி கேட்டதற்கு “தை பிறக்கட்டும்” என கூறிவிட்டு, கோயிலுக்கு சென்றார். அவர் தை பிறக்கட்டும் என கூறியது பேட்டிக்கா அல்லது தை பிறந்தால் வழி பிறக்கும் என்பது போல் கூட்டணி குறித்த முடிவுக்கா என்பது தெரியவில்லை.

தொடர்ந்து செண்பகத் தோப்பு மேற்கு தொடர்ச்சி மலை அடிவாரத்தில் உள்ள குலதெய்வமான வனப்பேச்சி அம்மன் கோயிலுக்கு செல்லும் பன்னீர்செல்வம், சிறப்பு பூஜைகள் செய்து வழிபாடு செய்ய உள்ளதாக அவரது ஆதரவாளர்கள் தெரிவித்தனர்.

# வனப்பரப்பை அதிகரிப்பதில் தமிழகம் முன்னணியில் உள்ளது- அமைச்சர் ராஜகண்ணப்பன் உறுதி

**நாகர்கோவில், ஜன.13:** தமிழக வனத்துறை அமைச்சர் ராஜகண்ணப்பன் குமரி மாவட்டம் வந்தார். அவர் நாகர்கோவில் வடசேரியில் உள்ள அரசு ரப்பர் கழகத்தில் அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார். ரப்பர் கழகத்தின் செயல்பாடுகள் குறித்து அவர் கேட்டறிந்தார். பின்னர் அவர் நிருபர்களிடம் கூறியதாவது:-

அரசு ரப்பர் கழகத்தின் தற்போதைய நிலை மற்றும் வளர்ச்சி பணிகளை மேற்கொள்வது கூட்டத்தில் குறித்து ஆய்வு செய்யப்பட்டது. இதில் பல்வேறு தகவல்கள் சேகரிக்கப்பட்டு உள்ளன. அதன் அடிப்படையில் எடுக்கப்படும் முடிவுகள் வருகிற 17-ந்தேதி மதுரை வரும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலினிடம் தெரிவிக்கப்படும்.

அரசு ரப்பர் கழகத்தில் 20 ஆண்டுகளாக பணிபுரியும் சி.எல்.ஆர் தொழிலாளர்களை பணி நிரந்தரம் செய்வது தொடர்பான கோரிக்கை முதலமைச்சரின் கவனத்துக்கு கொண்டு செல்லப்படும். வனப்பகுதியை ஒட்டிய பகுதிகளில் குரங்கு தொல்லை இருப்பதாக புகார்கள் வந்துள்ளன.

அவற்றை கூண்டுகள் வைத்து பிடித்து வனப்பகுதிக்குள் விட நடவடிக்கை எடுக்கப்படும். சிங்கவால் குரங்குகள் மலைப்பகுதிகளில் வசிப்பவை என்பதால், அவை மக்கள் வசிக்கும் பகுதிகளுக்கு வராது. வனப்பரப்பை அதிகரிப்பதில் தமிழகம் முன்னணியில் இருக்கிறது. மத்திய அரசின் வழிகாட்டுதலின்படி 33 சதவீத வனப்பரப்பு என்ற இலக்கை எட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. குமரி மாவட்டத்தில் ரப்பர் பூங்கா அமைப்பது குறித்து தற்போது முடிவெடுக்கப்படவில்லை. அடுத்த முறை தி.மு.க. ஆட்சி தான் தொடரும். எனவே எதிர்காலத்தில் இது குறித்து பரிசீலிக்கப்படும்.

கேரளாவில் தனியார் காடுகள் சட்டம் அமலில் உள்ள இடங்களில் பணிகள் செய்ய கெடுபிடி காட்டுவது இல்லை என்று கூறப்படுகிறது. ஆனால் கேரளாவில் உள்ள சட்ட திட்டங்களுக்கும், தமிழகத்தில் உள்ள சட்டங்களுக்கும் வேறுபாடு உள்ளது. கேரளாவில் அதிக மலைகள் உள்ளன. இங்கு மலைகள் குறைவு. நமது சட்ட விதிகளுக்கு உட்பட்டு நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

தனியார் காடுகள் சட்டத்தினால் விவசாயிகள் பாதிக்கப்படாமல் இருக்க உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றார்.

ஆய்வு கூட்டத்தில் அமைச்சர் மனோ தங்கராஜ், கலெக்டர் அழகுமீனா, வன அலுவலர் அன்பு, எம்.எல்.ஏ.க்கள் பிரின்ஸ், தாரகை கத்பர்ட், உணவு ஆணைய தலைவர் சுரேஷ்ராஜன், மேயர் மகேஷ், அரசு ரப்பர் கழக தலைவர் சதீஷ் உள்பட பலர் கலந்து கொண்டனர். முன்னதாக அமைச்சர் ராஜ கண்ணப்பனுக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் அறங்காவலர் குழு முன்னாள் தலைவர் பிரபா ராமகிருஷ்ணன், தி.மு.க. மாநகர செயலாளர் ஆனந்த், மண்டல தலைவர் ஜவகர், மாவட்ட துணை செயலாளர் பூதலிங்கம் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## அரசியல் கார்னர்

# மீண்டும் மும்பை வருவேன்: முடிந்தால்.. உத்தவ் சிவசேனாவுக்கு அண்ணாமலை சவால்



**மும்பை, ஜன.13:** மராட்டியத்தில் வரும் 15 ஆம் தேதி உள்ளாட்சித் தேர்தல் நடைபெற உள்ளது. மும்பை மாநகராட்சி தேர்தலில் போட்டியிடும் பாஜக வேட்பாளர்களை ஆதரித்து தமிழக பாஜக முன்னாள் தலைவர் அண்ணாமலை கடந்த வெள்ளிக்கிழமை அங்கு பிரசாரம் செய்தார். மேற்கொண்டார். அப்போது, மும்பை மாநகரம் மராட்டியத்திற்கு சொந்தமானது அல்ல என்றும் அது சர்வதேச நகரம் என்றும் பேசி இருந்தார்.

அண்ணாமலையின் இந்த பேச்சுக்கு கடும் எதிர்ப்புகள் கிளம்பியுள்ளன. உத்தவ் தாக்கரே சிவசேனா, ராஜ் தாக்கரேவின் மகாராஷ்டிரா நவநிர்மாண் சேனா ஆகியவை கடும் கண்டனம் தெரிவித்துள்ளன. உத்தவ் தாக்கரே சிவசேனாவின் அதிகாரப்பூர்வ நாளேடான சாம்னாவில், மும்பை மாநகருக்குள் அண்ணாமலை கால் வைத்தால் காலை வெட்டுவோம் என எழுதப்பட்டிருந்தது.

இதுகுறித்து அவர் சென்னை விமான நிலையத்தில் செய்தியாளர்களுக்குப் பேட்டி அளித்த அண்ணாமலை கூறியதாவது: “ராஜ் தாக்கரே போன்றவர்கள் மேடை போட்டு திட்டும் அளவிற்கு நான் வளர்ந்துள்ளேன். வேலை இல்லாமல் சிலர் அங்கிருந்து என்னை பற்றி திட்டிக் கொண்டிருக்கின்றனர், மிரட்டிக் கொண்டிருக்கின்றனர். என் தாய், தந்தையர் ஆடு மாடு மேய்ப்பவர்கள். அவர்களின் மகனான என்னை மும்பையில் கூட்டம் போட்டு திட்டுகின்றனர்.

ஒரு விவசாயி மகனாகிய என்னை மிரட்டுகின்றனர். யார் மிரட்டினாலும் நான் மும்பை செல்வதை தடுக்க முடியாது. நான் மும்பைக்கு வருவேன், வரத்தான் போகிறேன். முடிந்தால் என் காலை வெட்டுங்கள் பார்ப்போம். இங்க் அடித்துப் பாருங்கள். மிரட்டி, மிரட்டியே வாழ்பவர்களை பற்றி எனக்கு கவலை இல்லை, அதற்கெல்லாம் நான் அஞ்ச மாட்டேன்” என்றார்.

# ‘ஆட்சியில் பங்கு’: அமைச்சர் ஐ.பெரியசாமியின் பேச்சுக்கு செல்வப்பெருந்தகை பதிலடி



**சென்னை, ஜன.13:** திமுக கூட்டணியில் காங்கிரஸ் இருந்து வருகிறது. சட்டமன்ற தேர்தல் நெருங்கி வரும் நிலையில், ஆட்சியில் பங்கு என்ற தனது நிலைப்பாட்டை காங்கிரஸ் தொடர்ந்து தெரிவித்து வருகிறது. ஆனால் கூட்டணி ஆட்சி கிடையாது என்பதில் முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் உறுதியாக இருப்பதாக திமுகவின் மூத்த அமைச்சர் ஐ.பெரியசாமி நேற்று கூறி இருந்தார்.

இந்த நிலையில், தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை சென்னையில் இன்று செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது கூட்டணி ஆட்சி குறித்து ஐ.பெரியசாமி பேசியது தொடர்பாக செய்தியாளர்கள் கேள்வியெழுப்பினர். இதற்கு பதிலளித்து செல்வப்பெருந்தகை பேசியதாவது;

”எல்லோருக்கும் ஒவ்வொரு கருத்து உண்டு. நாங்கள் எங்களது கருத்தை சொல்லி இருக்கிறோம். ஆட்சியில் பங்கு இல்லை என்பது ஐ.பெரியசாமியின் தனிப்பட்ட கருத்து. ஆட்சியில் பங்கு குறித்து முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் மற்றும் காங்கிரஸ் தலைவர்கள் மல்லிகார்ஜுன கார்கே, ராகுல்காந்தி சேர்ந்து முடிவு எடுப்பார்கள்.” என்றார்.

அப்போது ‘தமிழகத்தில் காங்கிரஸ் ஆட்சி எப்போது?’ என செய்தியாளர்கள் கேள்வியெழுப்பினர் இதற்கு பதிலளித்த செல்வப்பெருந்தகை, ‘தமிழகத்தில் இப்போது நடப்பதும் காங்கிரஸ் ஆட்சிதான்’ என்று கூறியுள்ளார். செல்வப்பெருந்தகையின் இன்றைய பேட்டி, அரசியல் வட்டாரத்தில் பேசுபொருளாகியுள்ளது.

# “விஜய் விரல் காட்டுபவரே நீலகிரியில் எம்எல்ஏ ஆவார்” - செங்கோட்டையன் ஆருடம்



**கோத்தகிரி, ஜன.13:** தவெக தலைவர் விஜய் விரல் காட்டுபவர்களே எம்எல்ஏ ஆக முடியும் என தவெக நிர்வாக குழு ஒருங்கிணைப்பாளர் செங்கோட்டையன் தெரிவித்தார்.

நீலகிரி மாவட்டம் கோத்தகிரி அருகேயுள்ள பேரகணியில் ஹெத்தையம்மன் திருவிழாவில் பங்கேற்க நேற்று வந்த செங்கோட்டையன், டானிங்டன் பகுதியில் உள்ள எம்.ஜி.ஆர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

அங்கு தவெக நகர அலுவலகத்தை திறந்து வைத்தார். அதனைத்தொடர்ந்து, ஹெத்தையம்மன் கோயிலில் வழிபட்டு, காணிக்கை செலுத்தினார். பின்னர் அவர் செய்தியாளர்களிடம் கூறும்போது, “நீலகிரி மாவட்டத்தில் உள்ள படுகரின மக்கள் தங்கள் குல தெய்வமான ஹெத்தையம்மன் திருவிழாவில் பங்கேற்க அழைத்தனர்.

அதன் பேரில் நான் திருவிழாவில் கலந்து கொண்டேன். நீலகிரியை பொறுத்தவரையில் தவெக தலைவர் விஜய் யாரை விரல் காட்டுகிறாரோ, அவர் தான் சட்டப்பேரவை உறுப்பினர் ஆவார்” என்றார்.

Published by R.S ROSHINE Printed by R.S. ROSHINE On behalf of R.S. ROSHINE Printed at J.M. Process, No 29, V.N. Doss Road, BorderThottam, Mount Road, Chennai – 600002.
and Published From NO. 42/62, Buchammal Street, 1st Floor, New Washermenpet, Tondiarpet, Chennai, Tamilnadu – 600081. Editor: R.S.ROSHINE, PH: 8122836299, e-mail: paperboynewspaper@gmail.com